நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11,
தொலைபேசி 422839, 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6528 1990 மார்ச் 2 (வெள்ளிக்கிழமை) ★ ★ ★ දිනපති

துயபால 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

நேற்று மார்ச் முதலாம் திகதியிலிருந்து

# வடக்கு கிழக்கு தனிநாடு

# என்று மா. சபை தீர்மானம்

## ஈழ ஜனநாயக குடியரசு என்று பெயர்; ஒரு வருடத்துள்

### அரசமைப்பு சட்டம் உருவாக்கப்படும்

**19 நிபந்தனைகளை அரசு நிறைவேற்றினால் நிலைமை மறுபரிசீலனை; மீண்டும் மா. சபையாம்**

எல் தமபிராசா

திருகோணமலை, மார்ச் 1

வடக்கு கிழக்கு நேற்று மார்ச் முதலாம் திகதி முதல் தனி நாடாக, அதாவது தன்னாதிக்கமும் இறைமையும் உடைய சுதந்திர ஈழ ஜனநாயக குடியரசாக இருக்கும் என்ற பிரகடனம் அடங்கிய பிரேரணை ஒன்று வடக்கு கிழக்கு மாகாண சபையின் நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண சபை முதல்வர் திரு அ வரதராஜப் பெருமாள் தனிநாட்டு பிரகடனம் அடங்கிய பிரேரணையைக் கொண்டு வந்தார்— சபையில் உள்ள ஒரே ஒரு ஐ தே க உறுப்பினர் அல்ஹாஜ் மஹ்ரூப் மௌலானா பிரேரணையை எதி... ஆலோசனை நடத்த வேண்டும் என்று கூறிச் சென்றனர்—

பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது அவர்கள் சபையில் இருக்கவில்லை— ஈ பி ஆர் எல் எப் மற்றும் ஈ என் டி எல் எப் உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் தனிநாட்டுப் ... மாள் தனிநாட்டுப் பிரகடனத்துடன் கூடிய பிரேரணையைச் சபையில் வாசித்தார்—

"1990 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதியாகிய இன்றில் இருந்து இந்த மாகாண சபையானது தன்னாதிக்கமும் இறைமையும் உடைய ஈழ ஜனநாயக குடிய...

## மதிய உணவு பால் நஞ்சாகியதால்

## நோயுற்ற மாணவர்: தலா ரூ. 1000 நஷ்டஈடு

### மில்கோ நிறுவனம் வழங்கியது

கொழும்பு, மார்ச் 1

மதிய உணவாக வழங்கப்பட்ட பாலுணவு நஞ்சானதால் நோய்வாய்ப்பட்ட கொழும்பு நாரஹேன்பிட்டி வித்தியா வர்த்தன மகா வித்தியாலய மாணவர்களுக்கு மில்கோ நிறுவனம் நேற்றுக் காலை ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடாக வழங்கியது—

நோய்வாய்ப்பட்ட 58 மாணவர்களுக்கும் நேற்றைய தினம் மேற்படி பாடசாலையில் வைத்து இந்த நஷ்டஈட்டுப் பணம் கையளிக்கப்பட்டது—

(2 ஆம் பக்கம் பார்க்க)

சோமண்ணை



"ஆற்றங்கரை மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" இப்படி ஔவையாரே சொல்லி வைச்சிருக்கிறார் பாருங்கோ—

## வடக்கு கிழக்கில் இராணுவம் கடமையில் ஈடுபடக் கூடாது

### 6ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்க வேண்டும்

### 5 நாள் மாநாட்டு முடிவில் புலிகள் தீர்மானம்

மட்டக்களப்பு, மார்ச் 1

மாகாண ரீதியாக உருவாக்கப்பட இருக்கும் தமிழ் — முஸ்லிம் காவல் துறையினர் வாயிலாகவே பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபடக் கூடாது.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு வாகரையில் நடைபெற்ற புலிகளின் பொது அமைப்பு மாநாட்டில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து 5 நாள் நடைபெற்ற மாநாடு நேற்று முடிவடைந்தது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் மாத்தயா என்ற கோ மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

★ வடக்கு கிழக்கு மாகாண சபை ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை அல்ல. நீண்ட காலமாக இது செயல் இழந்துள்ளது.

★ மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற வேண்டும். ஈ பி ஆர் எல் எப் ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளை முன் வைத்து ஜனநாயக அரசு, சமாதானம் ஆகியவை உருவாவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதை நாம் வன்மை...

(2 ஆம் பக்கம் பார்க்க)

நட்புறவு ஒப்பந்தம்:

## இந்திய படை வெளியேறிய

### பின்னரே ஏற்பாடுகள் செய்யப்படும்

கொழும்பு, மார்ச் 1

மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் இலங்கை — இந்திய நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும் என இந்தியா வற்புறுத்தியதாலேயே நாம் அதனை பின்போட்... யாகத் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளை செய்வார்.

இப்படிக் கூறினார் வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன ... எழுப்பினர்.

நட்புறவு ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு ஏதும் நன்மை

(4ஆம் பக்கம் பார்க்க)

பினர் அல்ஹாஜ் மவூஹர் மௌலானா பிரேரணையை எதிர்த்து வெளிநடப்புச் செய்தார்–

ஸ்ரீ லங்கா முஸ்லிம காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்தப் பிரேரணை தொடர்பாகத் தங்கள் தலைமைப்பீடத்துடன் கலந்து

எல் எப் உறுப்பினர்களின் ஒத்துழைப்பு ஆதரவுடன் தனிநாட்டுப் பிரேரணை நிறைவேறியது–

அவைக் கூட்டத்துக்கு சபைத் தலைவர் திரு பொன் ராமராஜ சூாரியர் தலைமை வகித்தார்–

முதல்வர் வரதராஜப் பெரு

னது தன்னாதிக்கமும் இறைமையும உடைய ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக செயல்படும என பிரகடனப் படுத்தப்படுகின்றது–

1991 ஆம ஆண்டு பெப்ரவரி 28 ஆம திகதி வரை இந்த சபையானது தன்னாதிக்கமும இறை

(2 ஆம பக்கம பார்க்க)

தியா வற்புறுத்தியதாலேயே நாம அதனை பின்போட்டோம.

இந்திய அமைதிப் படை முற்றாக இலஙகையில் இருந்து விலகிச் சென்ற பின்னரே ஜனாதிபதி இந்தியப் பிரதமருடன் நேரடி

ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இலஙகை – இந்திய நட்புறவு ஒப்பந்தம தொடர்பாக நிருபர்கள் கேள்வி

# சட்டசபை தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வி

## பாண்டிச்சேரியில்

## தி. மு. க. — ஜனதாதள் கூட்டரசு

புதுடில்லி, மார்ச் 1

இந்தியாவின் 8 வட மாநிலஙகளுக்கு நடைபெற்ற சட்ட சபைத் தேர்தல்களில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் இந்திரா காஙகிரஸ் 6 மாநிலஙகளில் ஆட்சி அமைக்கும வாய்ப்பை இழந்துவிட்டது– அதற்குப் பெரும பின்னடைவு ஏற்பட்டு இருக்கிறது–

பாரதிய ஜனதாக் கட்சியும, ஜனதா தள் கட்சியுமே பெரு வெற்றி ஈட்டியுள்ளன–

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இந்திரா காங்கிரஸ் தோற்றுவிட்டது– அஙகே தி மு க ஜனதா தள் கூட்டணியே ஆட்சி அமைக்கிறது–

ஒரிஸாவில் பிரதமர் வி. பி சிங்கின் ஜனதா தள் கட்சி நாலில் மூன்று பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கிறது–

இந்தியன் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியில் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில்

(2 ஆம பக்கம பார்க்க)

# சர்வகட்சி மாநாடு

## பிரதிநிதிகள் கூட்டம் 14இல்

கொழும்பு மார்ச் 1

சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் கூட்டம மார்ச் 14 ஆம திகதி முதன் முறையாக கூடும–

இக்கூட்டத்தில் கடந்த பெப்ரவரி 14ஆந் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட 17 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர்–

ஒவ்வொரு கட்சியில் இருந்தும தலா ஒரு பிரதிநிதி வீதம கலந்து கொள்வார்கள்–

இளைஞர் அமைதியின்மை தொடர்பாக மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட 13 விடயஙகள்

(2 ஆம பக்கம பார்க்க)

# பிரதமர் இன்று பேருவளை விஜயம்

கொழுமபு, மார்ச் 1

பிரதமர் டி பி விஜேதுங்க இன்று 2 ஆம திகதி பேருவளைக்கு உத்தியோகபூர்வ விஜயம மேற்கொள்கிறார்–

(2 ஆம பக்கம பார்க்க)

# 1250 இந்திய வீரர்கள்

## நேற்று முன்தினம் வெளியேறினர்

கொழும்பு மார்ச் 1

காங்கேசன்துறை மற்றும திருகோணமலை பிரதேசஙகளில் இருந்து நேற்று முன்தினம 1250 இந்திய இராணுவ வீரர்கள் வெளியேறினர்–

இவர்களுடன் 20 கனரக வாகனஙகள் பெருந் தொகையான ஆயுதஙகளும கொண்டு செல்லப்பட்டன–

திட்டமிட்டப்படி மார்ச் 31 ஆம திகதிக்குள் இந்தியப் படைகள் இஙகிருந்து முற்றாக வெளியேறிவிடும–

இப்படிக் கூறினார் அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன–

(ந—ய)

# முதல் அமைச்சரின் சிபார்சு இன்றி மா. சபை கலைப்பு: சட்டம் தெளிவாக இல்லை

— பிரட்மன் வீரகோன்

கொழுமபு, மார்ச் 1

முதல் அமைச்சரின் சிபார்சு இன்றி மாகாண சபையை கலைப்பது என்பதில் சட்டத் தெளிவு இல்லை– எனினும மாகாண சபை நிர்வாகத்தை ஜனாதிபதி பொறுப்பேற்க முடியும்–

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகரான திரு பிரட்மன் வீரகோன் இதனை நேற்று பத்திரிகையாளர்களிடம கூறினார்–

வடக்கு, கிழக்கு மாகாண சபை கலைப்பு விவகாரம தொடர்பாக பத்திரிகையாளர்கள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவிடம் கேள்விகளை எழுப்பினர்–

வடக்கு, கிழக்கு மாகாண சபையை முதல்வர் வரதராஜப் பெருமாளின் சிபார்சு இன்றி கலைக்க முடியாது– இந்திய அமைதிப் படை வெளியேறிய பின் அஙகே போதிய பாதுகாப்பு இல்லாவிட்டால் நாம் விரும்பிய இடத்தில் கூட்டத்தை நடத்தலாம–

திருகோணமலையில் மட்டுமே கூட்டம நடத்த வேண்டும என்ற நியதி இல்லை கொழும்பிலும நடத்தலாம கூட்டத் தொடர் முறையாக நடைபெறும்போது சபையை கலைக்க

(4ஆம பக்கம பார்க்க)

# சட்டத்தரணிகள் சங்கம் மீது சுமத்தியகுற்றச்சாட்டு வாபஸ்

கொழுமபு, மார்ச் 1

"இலஙகை சட்டத்தரணிகள் சஙகத்திற்கு எதிராக முன்பு சுமத்திய குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். நாசகார சக்திகளுக்கு அவர்கள் உதவவில்லை என்று கூறி இருப்பதையும ஏற்றுக் கொள்கிறேன்.

வெளிவிவகார அமைச்சரும பாதுகாப்பு ராஜாஙக அமைச்சரு

(2 ஆம பக்கம பார்க்க)

# நெடுமாறன் வருகை பற்றி பரிசீலனை செய்யப்படும்

கொழும்பு மார்ச் 1

தமிழக அரசியல்வாதியான காந்தி காமராஜ் காஙகிரஸ் தலைவரான திரு நெடுமாறன் முறையாக விசா பெற்று இஙகு வந்துள்ளார் என்பது எனக்குத் தெரியாது– இது தொடர்பாக பரிசிலனை செய்யப்படும்–

(2 ஆம பக்கம பார்க்க)

# புளொட் இளைஞர்கள்

## கொழும்பில் கைதாகவில்லையாம்

கொழுமபு, மார்ச் 1

கொழும்பில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கும புளொட் இயக்கத்திற்கும எந்தவிதமான தொடர்பும இல்லை– இது திட்டமிட்டு எமது இயகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசமத்தனமான பிரசாரமாகும்–

(2 ஆம பக்கம பார்க்க)

# 500 பட்டதாரி மாணவருக்கு இந்தியா புலமைப் பரிசில்

கொழும்பு மார்ச் 1

இந்திய அரசு 500 பட்டதாரி மாணவர்களுக்கு இவ்வருடம புலமைப் பரிசில்களை வழஙக முன்வந்துள்ளது–

இந்திய வெளிவ்வகார அமைச்சர் திரு குஜ்ரால் இதனை இலஙகை அரசுக்கு உத்தியோகப் பூர்வமாக அறிவித்துள்ளார்

(2 ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# சகல மாவட்டங்களிலும் பாலர் பாடசாலைகள்

## கூட்டுறவு சங்க சம்மேளனம் அமைக்கும்

அக்குறணை பெப் 28

இலங்கை கூட்டுறவு சங்க சம்மேளனம் இலங்கை முழுவதிலும் பாலர் பாடசாலைகளை அமைக்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஜனசக்தி பெறவோரது உதவிகளையும் பெற்றுக் கொள்ள சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

சகல மாவட்டங்களிலும் பாலர் பாடசாலைகளை அமைக்கும் திட்டத்தில் முதற் கட்டமாக அனுராதபுர மாவட்டத்தில் உள்ள எப்பாவலை பிரதேசத்தில் 20 கூட்டுறவு பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான கூட்டுறவு பாலர் பாடசாலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை தேசிய கூட்டுறவு சங்க சம்மேளனம் எடுத்து வருகின்றது.

(இ—411)

## கொள்ளை கோஷ்டி கைது

கொழும்பு மார்ச் 1

கடந்த காலங்களில் மக்களை பயமுறுத்தி பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு கோஷ்டியினரை கிரி—எல்லை பொலீஸார் கைது செய்தனர்.

இக்கோஷ்டியினர் மக்களை பயமுறுத்துவதற்காக பயன்படுத்திய விளையாட்டு துப்பாக்கி ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் துப்பாக்கி வாள்கள் — கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் — பணம் — மோட்டார் சைக்கிள் போன்றவற்றையும் பொலீஸார் கண்டெடுத்துள்ளனர்.

(இ—வ)

## வடக்கு கிழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையும் உடைய சுதந்திர ஈழ் ஜனநாயக குடியரசின் அரசியல் யாப்பு நிர்ணய சபையாகவும் செயல்படும் எனவும் பிரகடனப்படுத்துகிறது.

இப்படி திரு வரதராஜப் பெருமாள் பிரேரணையை வாசித்தார்.

ஈ பி ஆர் எல் எப் இயக்கம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்த 19 நிபந்தனைகளையும் இலங்கை அரசு முழுமையாகவும் முறையாகவும் நிறைவேற்றுமானால் தனிநாட்டுத் தீர்மானத்தில் அடங்கிய இரண்டு பிரகடனங்களையும் இப்பேரவை மீளாயவு செய்யவும் வழமைபோல் வடக்கு கிழக்கு மாகாண சபையாகச் செயல்படவும் தயாராக இருக்கின்றது என்று முதல்வர் கூறினார்.

இன்று முதல் ஈழ ஜனநாயக குடியரசின் கீழ் செயல்பட ஆரம்பித்து விட்டோம்.

எமது இந்த செய்கை ஆறாவது அரசமைப்பு திருத்தத்திற்கு மாறானது என்று இலங்கை அரசு கருதுமேயானால் இரண்டு விஷயங்கள் தெளிவாகும்.

ஒன்று இலங்கை அரசு புலிகளையும் ஏமாற்றியே வருகின்றது என்பது.

மற்றது புலிகளின் கோரிக்கையின் படி ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை அரசு நீக்காது என்பது.

இந்தப் பேரவையின் (தேசிய அரசுப் பேரவை) தலைவராக திரு பொன் ராம ராஜகாரியர் செயல்படுவார் நான் (வரதராஜ பெருமாள்) ஒரு சாதாரண உறுப்பினராகவே செயல்படுவேன் என்றும் முதல்வர் கூறினார்.

நேற்று அவர் சபைக்கு தேசிய உடை அணிந்து வந்திருந்தார்.

சபைக்கு வெளியே வந்த முதல்வர் வரதராஜப் பெருமாள் பேரவை தலைவர் திரு பொன்

கைராஸ் இன்டர் நேஷனல் டுவஸ் & டிரேவல்ஸ்
புனித றமழானில்
உமரா யாத்திரை 1990
(இன்ஷா அல்லாஹ்)
கைராஸ் நிறுவனத்தில் இவ்வருடமும் புனித நோன்பு மாதத்தில் உமராச் செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளோம்.
கொழும்பு — ஜித்தா
ஜித்தா — மதீனா (விமானம் மூலம்)
புனித மதீனாவில் ஒரு ஜும்ஆத் தொழுகையுடன் மூன்று நாட்கள் கழிக்கவும் ஏனைய நாட்களுடன் புனித லெய்லத்தில் கத்ர் இரவு (நோன்பு 27) புனித நோன்புப் பெருநாள் ஆகிய தினங்களை புனித மக்காவில் கழிக்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளோம். குளிரூட்டப்பட்ட தங்குமிட வசதிகளுடன் உங்கள் விருப்பம் போல் இலங்கை சமையற்காரர்களை கொண்டு உணவு வசதிகளும் செய்து தரப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
அல்ஹாஜ் எஸ் எச் சமூன் (ஜே பி)
(கைராஸ் குரூப் உரிமையாளர்)
கைராஸ் இன்டர்நேஷனல்
டுவஸ் & டிரேவல்ஸ்
253/ஏ, முதலாம் மாடி,
ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13
தொலைபேசி எண்— 547123— 436848— 433032

## புளொட் இளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என புளொட் இயக்கத்தைச் சேர்ந்த திரு கந்தசாமி என்பவர் அமைச்சர் விஜேரத்தினவிடம் நேரடியாக ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

இரண்டு தினங்களுக்கு முன் வட பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தங்கம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஒருவர் கொக்குவிலில் இருந்தும் மற்றவர் பருத்தித்துறையில் இருந்தும் மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும் கூறப்படுகிறது.

இப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து எந்த ஒரு வாகனமும் புலிகளின் பரிசோதனைகளை மீறி வர முடியாது.

எல்லா வாகனங்களும் தீவிரமாக இவர்களால் பரிசோதிக்கப்படுகின்றன. இப்படியான நிலையில் இவர்கள் புளொட் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று அரச தகவல் தொடர்பு சாதனங்கள் பிரசாரப்படுத்தி உள்ளன.

இது உண்மைக்கு மாறானதாகும் என திரு கந்தசாமி என்னை சந்தித்துக் கூறினார்.

இதனை திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

(ந—ய)

## வடக்கு கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக கண்டிக்கிறோம்.

★ தமிழ் — முஸ்லிம் மக்கள் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பொருளாதாரத்தை வளம்படுத்த தாயகப் பூமியை பாதுகாக்க ஒன்றுபட்டு போராடுவதற்காக புரட்சி அரசியல் இயக்கத்திற்கு ஒரு அணியாக அணிதிரள வேண்டும்.

★ தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை மீறும் ஜனநாயக அரசியலுக்கு முரண்பாடாக அமைந்துள்ள 6 ஆவது அரசமைப்பு திருத்தம் நீக்கப்பட வேண்டும்.

★ வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றம் பல சிக்கல்களை உருவாக்கி உள்ளது. சமாதானத்திற்கும் அமைதிக்கும் பாதிப்பாக இருக்கிறது. இதனை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

★ மலையக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

★ அவர்களின் சமூக பொருளாதார வாழ்வை உயர்த்த அரசு உருப்படியான திட்டங்

கிழக்கு மாகாணங்களில் இருந்து நீக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தயா என்ற மகேந்திரராஜா தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் செயலாளர் நாயகம் யோகி அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம். பிரதித் தலைவர் எஸ் கரிகாலன், உட்பட எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த பொறுப்பாளர்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.

(உ—கு—த)

## பிரதமர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இ தியாஸ் பாக்கீர் மாக்காரின் அழைப்பின் பேரில் பிரதமர் அங்கு செல்கிறார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி கிராமிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் 100 இளைஞர்களுக்கும், யுவதிக

## சட்டத்தரணிகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான திரு ரஞ்சன் விஜேரத்ன இதனை நேற்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு பயங்கரவாத இயக்கம். அது நாசகார சக்திகளுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் அதில் ஒரு அங்கம். சர்வதேச மன்னிப்புச் சபை வழங்கிய நிதியை ஜே வி பி நடவடிக்கைகளுக்கு மேற்படி சங்கம் உதவியாக வழங்கி உள்ளது.

தீவிர ஜே வி பி உறுப்பினர்களுடன் இந்தச் சங்கம் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளது என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வந்தது தெரிந்ததே.

இதனை ஆட்சேபித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அமைச்சர் விஜேரத்னவுக்கு கடிதம் ஒன்றை எழுதி உள்ளது.

அமைச்சரின் எல்லா குற்றச்சாட்டுகளையும் முற்றாக மறுத்துள்ளதோடு, சர்வதேச மன்னிப்புச் சபையினால் வழங்கப்பட்ட நிதி, மனித உரிமை மீறல், மற்றும் ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான சட்ட உதவிகளைப் பெறுவதற்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது.

அமைச்சர் கூறுவது போல் எந்த ஒரு நாசகார சக்திகளுக்கும் உதவவில்லை. ஜே வி பி இயக்கத்திற்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

என்றும் பொறுப்பான அமைச்சர் இப்படியான குற்றச் சாட்டுகளை சுமத்துவது எமது சங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒரு செயலாகும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை பத்திரிகையாளர்களிடம் படித்துக் காட்டிய அமைச்சர், எவருக்கும் தவறு ஏற்படுவது இயற்கை. சுட்டிக் காட்டப்படும் போது அதனை திருத்திக் கொள்வது தவறு இல்லை.

சட்டத்தரணிகள் சங்கம் தொடர்பாக நான் ஏற்கனவே தெரிவித்திருந்த கருத்துக்களை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்றும் கூறினார். (ந—ய)

## நெடுமாறன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு கூறினார்.

தமிழக அரசியல்வாதியான திரு நெடுமாறன் இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கூட்டங்களிலும் பிரசாரம் செய்கிறார்.

ஏற்கனவே இவர் ஒரு முறை படகு மூலமாக இலங்கைக்குள் வந்து சர்ச்சையை ஏற்படுத்தினார். இப்பொழுது மீண்டும் வந்துள்ளார். இதுபற்றி அரசுக்கு

தினபதி
சிறு விளம்பரம்

கடை தேவை

கலேவெல, பிரதான வீதியில் சில்லறை வியாபாரத்திற்கு கடை வாடகைக்குத் தேவை. உகந்த இடம் இருப்பின் கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்— ஏ வி எம் ஹனீபா, இல— 155, தம்புள்ளை வீதி, கலேவெல.

032180

முஅத்தின் தேவை

ஹம்பாந்தோட்டை ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முஅத்தின் தேவை. தங்குமிட வசதிகளுடன் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்க— செயலாளர், பரிபாலன சபை, ஜும்ஆ பள்ளிவாசல், ஹம்பாந்தோட்டை.

032375

கதீப் தேவை

ஹம்பாந்தோட்டை ஜும்ஆ பள்ளிவாசலுக்கு கதீப் தேவை. தங்குமிட வசதிகளுடன் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்க— செயலாளர், பரிபாலன சபை, ஜும்ஆ பள்ளிவாசல், ஹம்பாந்தோட்டை

032315

இன்றைய திரைகளில்

5 வது வாரம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
2—30, 6—00, 9—30
லிடோ
(யாழ்நகர்)
10—30, 2—00, 6—00
கிறனாடா
(பேருவளை)

253/ஏ, முதலாம் மாடி,
ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13
தொலைபேசி எண்- 547123- 436848- 433032
(இலங்கை உல்லாசப் பிரயாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டது)
(Khairaz Internation Tousr & Travels)

சவூதி
அரேபியாவில்
உடனடி
வேலை வாய்ப்புக்கள்

1 பிளம்பர்
2 வெல்டர்
3 பெயிண்டர்
4 கொம்பியூட்டர் ஓபரேட்டர்
5 இலக்டிரிஷன்

சவூதி அரேபியா பிரதிநிதிகளால் இன்று முதல் நேர்முகப் பரீட்சை நடைபெறும்- சம்பளம் அனுபவத்திற்கேற்ப கொடுக்கப்படும்-

டிரக்ட் லைன்
2 வது மாடி
225- டாம் வீதி
கொழும்பு—12
அங்கீகார இல- எஸ்/524/06/90
ஏஎல்/524/04/90
ஏஎல்/524/03/90
ஏஎல்/524/08/90

நேற்று அவர் சபைக்கு தேசிய உடை அணிந்து வந்திருந்தார்-

சபைக்கு வெளியே வந்த முதல்வர் வரதராஜப் பெருமாள் பேரவை தலைவர் திரு பொன் ராம ராஜகாரியர், ஈ பி ஆர் எல் எப் தலைவர் திரு பத்மநாப ஆகியோரும் ஏனைய உறுப்பினர்களும் பொதுமக்களால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப் பட்டனர்- (உ-ய-288)

★ ... அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

★ அவர்களின் சமூக பொருளாதார வாழ்வை உயர்த்த அரசு உருப்படியான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

★ வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைதி சமாதானம் சகஜ நிலை தொடர்வதால் அவசர கால சட்டத்தை வடக்கு

## சட்டசபை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தி மு க. ஜனதா தள் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது-

பாண்டிச்சேரியில் மொத்தத் தொகுதிகள் 30-

தி மு க கழகம்—ஜனதா தள் கூட்டணி – 15 இடங்கள் அ இ அ தி மு கழகம்—இந்திரா காங்கிரஸ் கூட்டணி – 14 இடங்கள் சுயேச்சை – 1 இடம்-

பாண்டிச்சேரியில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்ததனால் பாண்டிச்சேரியின் முதலமைச்சர் ஜனாப் எம் ஏ பாறாக் நேற்று ராஜினாமாச் செய்துள்ளார்-

இந்த ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட பாண்டிச்சேரி அளுநர், புதிய முதலமைச்சர் தெரிவாகி பதவி ஏற்கும் வரை, காபந்து அரசை நடத்துமாறு பாறாக் இடம் கேட்டுக் கொண்டார்-

பாண்டிச்சேரியில் 17 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி 13 இடங்களை வென்று தனிப் பெரும் கட்சியாக உள்ளது

18 இடங்களில் போட்டியிட்ட தி மு க 9 இடங்களில் வெற்றியீட்டியிருக்கிறது-

மூன்று தொகுதிகளில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களை வென்றது-

13 இடங்களில் போட்டியிட்ட அ இ அ தி மு கழகம் 3 இடங்களையே பிடித்தது-

பழனித் தொகுதிக்கான நாடாளுமன்ற இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரு வெற்றியீட்டியுள்ளது-

திரு சேனந்திபட்டி கவுண்டர் 3 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று தி மு க வேட்பாளரைத் தோற்கடித்துள்ளார்-

திரு சேனாந்திபட்டி கவுண்டர் இத் தொகுதியில் தெரிவு செய்யப்பட்டிருப்பது 3ஆவது தடவையாகும்-

(உ-கு)

## நோயுற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் நோயுற்ற மாணவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதற்கான செலவுத் தொகையாக பாடசாலைக்கு மேலும் ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது

மில்கோ நிறுவனத்தின் சார்பில் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு கே பீ நிஹால் நந்த, பொது முகாமையாளர் திரு வீ ஆர் டபிள்யூ சூரிய ஆராச்சி விசேஷ திட்ட முகாமையாளர் பி எல் பீரிஸ் கொழும்பு தெற்கு பிரதி கல்வி பணிப்பாளர் திரு நிமல் ரணசிங்க ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்-

(நு-வ)

... மக்கள் வங்கி, இலங்கை வங்கி கிராமிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் 100 இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் சுயதொழில் கடன் உதவிகளையும் பிரதமர் வழங்குவார்-

“இளைஞர் வாரத்”தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பிரதமர் பரிசுகளையும் வழங்குவார்-

பேருவளை கூட்டுறவு இல்லத்தில் இந்த வைபவம் நடைபெறும்-

இளைஞர் விவகார ராஜாங்க அமைச்சர் திரு சந்திரா ரன்கந்த மேல் மாகாண உணவுக் கூட்டுறவு கடற்றொழில், கைத்தொழில் சமூக சேவைகள் அமைச்சர் ஜனாப் ஏ எச் யூசுப் வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் இந்த வைபவங்களில் பங்குபற்றுவர்-

(நு-007)

## சர்வகட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகவே பிரதிநிதிகள் கூட்டத்தில் ஆராயப்படும்-

இதேவேளை சுதந்திர சரண கமிட்டிக்கு ஸ்ரீ ல சு கட்சி அதன் பிரதிநிதிகள் இருவரின் பெயர்களை அறிவித்துள்ளது-

மற்றும் லிபரல் கட்சி – ஐக்கிய தேசியக் கட்சி – அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் ஒரு முஸ்லிம் அமைப்பு என்பனவும் தமது பிரதிநிதிகளின் பெயர்களை சமர்ப்பித்துள்ளன-

கூடிய விரைவில் ஏனைய கட்சிகளும் அவற்றின் பிரதிநிதிகளின் பெயர்களை சமர்ப்பிக்கும்-

இதனை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகரான திரு பிரட்மன் வீரகோன் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்-

(நு—ய)

ஏற்கனவே இவர் ஒரு முறை படகு மூலமாக இலங்கைக்குள் வந்து சர்ச்சையை ஏற்படுத்தினார்- இப்பொழுது மீண்டும் வந்துள்ளார்- இதுபற்றி அரசுக்கு தெரியுமா?

இவர் முறையான பாஸ்போர்ட் விசா பெற்று வந்தாரா என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்-

இக்கேள்விக்குப் பதில் அளித்த போது அவர் பாஸ்போர்ட் விசா பெற்று வந்துள்ளாரா என்பது தொடர்பாக என்னால் உறுதியாக கூற முடியாது என்றும் இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்யப்படும் என்றும் திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்-

(நு—ய)

## 500 பட்டதாரி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைப் பேச்சாளரான திரு ரஞ்சன் விஜேரத்ன இதனை நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்-

விஞ்ஞான தொழில்நுட்பத் துறை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரான டாக்டர் சிறில் பொன்னம்பெரும இந்திய வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகவே இலங்கை மாணவர்களுக்கு இந்தியா புலமைப் பரிசில்களை வழங்க தீர்மானித்துள்ளது-

இந்த அடிப்படையில் 400 பட்டதாரி மாணவர்களுக்குப் பல்கலைக்கழகங்களிலும் மற்றும் 100 வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கும் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்-

இந்தியாவின் இந்த நல்லெண்ண உதவிக்கு இலங்கை அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது-

தகுதியான மாணவர்களை உயர்கல்வி அமைச்சு திறமை அடிப்படையில் தெரிவு செய்யும்-

இப்படி அமைச்சர் விஜேரத்ன கூறினார்-

(நு—ய)

லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00
கிறனாடா
(பேருவளை)
10-30, 2-30, 6-00
பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

76 வது நாள்!
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம்)
ராதா - நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

81 வது நாள்!
ஜெஸிமா
(கிராண்ட்பாஸ்)
2-30, 6-00, 9-30
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
நில்மினி
(வத்தளை)
10-30, 2-30, 6-00
கார்த்திக் — குஷ்பு
விஜித ராமசாமி
நடித்த
வருஷம் 16
(கலர்)

# அமெரிக்க இரவு விடுதியில் நடிகை குஷ்பு நடனம்

ஏவி எம படப்பிடிப்பு நிலையத்தின் ஒரு அரங்கினுள் மினுமினுக்கும் பட்டாடை அணிந்து ஜிலு ஜிலு நடன நளின ஒய்யாரிகள் பலர் புகுவதும அவர்களை தொடர்ந்து ராமராஜன் குஷ்பு செல்வதும நிருபரின் காதில் விழுந்தது—

அந்த அரங்குமளமகும ஆயிரம சின்னஞ்சிறு பல வண்ண மின் விளக்குகள் கண்சிமிட்டின... வண்ண வண்ண தோரணங்களின் அழகோ அற்புதமாகக் காட்சி தந்தது—

நடு உயரம உள்ள விசாலமான மனநற்றும் எதையும துல்லியமாக எடைபோடும பார்வையும் உள்ள ஒருவர் (டைரக்டர் ஷண்முகப்பிரியன்) "ஸ்டார்ட் காமிரா!" எனறு சொல்வதற்குள் "வீட்டை மறந்து ஊரை மறந்து நான் பாட்டுப்பாடித் திரிஞ்சதும" என்று பாட்டு ஒலித்தது—


இரவு நேர கேளிக்கை விடுதிகளில் நடைபெறும நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாட அங்கு வந்து நின்ற பன்னீர்ச்செல்வத்தின் (ராமராஜன்) கால்கள் குதிபோட்டன...

பன்னீர்ச்செல்வம பாட அவனுடன் கேளிக்கை விடுதியின் அழகு குமரியான ஜூலி (குஷ்பு) சேர்ந்து ஆட இவ்விருவரையும் சுற்றிச் சுற்றி ஒரு டஜன் இளம சிட்டுக்களான நடனகாரிகள் ஆடினர்...

"ஆகா... இந்த நடனக் காட்சி மிக அருமையாக இருக்கும ராமராஜன் சார்... உங்கள் ஆட்டம பிரமாதம்... எடுத்த எடுப்பிலேயே பாடலுக்கு ஏற்றவாறு ஆடியதால் அடுத்த காட்சியை இனி படமாக்கலாம என்றுகூறி காமிரா பக்கம திரும்பினார் ஷண்முகப்பிரியன்!

இந்த நடனக் காட்சி அங்கு நடந்த ஸ்ரீமிஸ்ரி பிலிமஸ் "பாட்டுக்கு நான் அடிமை" என்ற படத்துக்காக படமான காட்சி!

இந்தப் படத்தில் கிராமத்து இளைஞன் பன்னீர்ச்செல்வ



குஷ்பூ

மாக நடிக்கும ராமராஜன் வேட்டி சட்டை அணிந்து நடிக்கிறார்—

சூழ்நிலை காரணமாக அமெரிக்காவுக்குச் சென்ற அங்குள்ள கேளிக்கை விடுதி இன்னிசைக் குழுவில் சேர்பவராக நடிப்பதால் அதற்கான நவநாகரிக உடையும் அணிந்து நடிக்கிறார்—

அன்று படப்பிடிப்பில் கலந்து கொண்ட அனைவரும ராமராஜன் அணிந்து நடித்த உடை அலங்காரத்தைப் பார்த்து ரசித்ததுடன் பாராட்டவும செய்தனர்—

குஷ்பு அணிந்திருந்த உடலைக் கௌவும பளபளப்பு உடைதான் ராமராஜன் குஷ்பு நடனப் பெண்களுடன் ஆடிய பாடல் நடனக் காட்சிகள் படப்பிடிப்பு இரவு வெகுநேரம வரை நடந்தது—

பாட்டுக்கு நான் அடிமை படத்தில் ராமராஜன் ரேகா குஷ்பு ரவிச்சந்திரன் லிவிங்ஸ்டன் செந்தில் கவுண்டமனி சுலக்ஷனா மனோரமா விஜயசந்திரிகா பௌர்ணமி ஆகியோர் நடிக்கிறார்கள்...

டி கே எஸ் பாபு நடனம் அமைக்கிறார்— ஒளிப்பதிவு அசோக் சௌத்திரி— இசை இளையராஜா— டைரக்ஷனுடன் கதை திரைக்கதை வசனமும ஷண்முகப்பிரியனே!

(இ—10)



காதல் வலைக்குள் சிக்கித் தவிக்கும பறவை, இன்ப நினைவுக்குள் ஏங்கித் தவிப்பதும இயற்கை, இங்கே காதலன் முகேஷ் அருகிலிருக்க ராதா நினைப்பது எந்தக் கண்ணனையோ தெரியவில்லை?, [படம- மனைவி ஒரு மாணிக்கம]

தினபதி சினிமா

# யாழ். மாவட்டத்தில் வீடமைக்க கடனுதவி

## நீண்ட இடைவெளிக்கு பின் வழங்கப்படுகிறது

கோப்பாய், பெப் 28

யாழ் மாவட்டத்தில் வீடமைப்பு வேலைகளுக்கு கடனுதவி வழங்கப்படவுள்ளது, கடன் வழங்குவதற்கான விண்ணப்பங்களை 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை விநியோகித்து வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் வீடமைப்புக் கடன் வழங்குவது நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும ஆரமபிக்கப்பட்டுள்ளது,

5 ஆயிரம ரூபாவுக்கு குறைந்த மாதாந்த வருமானம் உள்ளவர்களுக்கு 50 ஆயிரம ரூபாவும 5 ஆயிரம ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம உள்ளவர்களுக்கு 1½ லட்சம ரூபா வரையும கடன் வழங்கப்படும,

இக்கடன் வசதியினை சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்கும புதிய வீடுகளை அமைப்பதற்கும பயன்படுத்தலாம,

(இ-142)

## இன்று பிரதமர் பேருவளை விஜயம்

பேருவளை, பெப் 28

இன்று 2ஆம திகதி வெள்ளிக்கிழமை, பிரதமர் திரு டி பி விஜேதுங்கா பேருவளை நகருக்கு விஜயம செய்வார்,

பேருவளை "நகர எழுச்சி - கிராம எழுச்சி" ஆகிய திட்டங்களின் கீழ் இடமபெறும பல வைபவங்களில் இவர் கலந்து கொள்வார்,

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் அழைப்பினை ஏற்று பிரதமர் இங்கு விஜயம செய்கின்றார்,

(இ-040)

## காங்கேசன்துறை - பொத்துவில் வரை படகு சேவை வேண்டும்

கோப்பாய் பெப் 28

காங்கேசன்துறையில் இருந்து பொத்துவில் வரை படகுச் சேவை ஒன்று நடத்தப்பட வேண்டும்—

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ பொதுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது—

வடக்கு கிழக்கு மாகாண சபை காங்கேசன்துறை -பொத்துவில் படகுச் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும—

இதன் மூலம இந்தப் பகுதிகளில் வசிக்கும மக்கள் பெரும நன்மை அடைவர் என தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது—

சமாஜத் தலைவர் திரு கே தியாகராசா தலைமையில் வேமபடி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இக்கூட்டம நடைபெற்றது

கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்க சில்லறை வியாபார நிலையங்களை யாழ் மாவட்டத்தில் மீண்டும் திறக்க வேண்டும—

யாழ் மாவட்டத்தில் சேதமடைந்த தபால் பெட்டிகள் உடனடியாக திருத்தி அமைக்கப்பட வேண்டும என்ற தீர்மானங்களும இங்கு நிறைவேற்றப்பட்டன—

(இ—142)

## புத்தளத்தில் க. பொ. த (சா.த) கருத்தரங்கு

புத்தளம, பெப் 28

புத்தளம முஸ்லிம நலன்புரிச் சங்கம க பொ த (சா—த) மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்றை நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது,

இம மாதம் நடைபெறவுள்ள பரீட்சையின் முன்னோடியாக இப்பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது,

புத்தளம பாத்திமா மகளிர் மத்திய கல்லூரியில் எதிர்வரும 4, 10, 11, 24, 25 ஆம திகதிகளில் இப்பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறும என தெரிவிக்கப்பட்டுள்ளது,

(இ-241)

## திருகோணமலையில் பயிலுநர் ஆசிரியர் நியமனம்

### மார்ச் 15க்கு முன் வழங்க திட்டம்

மூதூர் பெப் 28

திருகோணமலை மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர்களுக்கான நியமனம இம்மாதம நடுப் பகுதிக்கு முன்னர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது—

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன—

இவ்வாசிரியர் நியமனம் தொடர்பான எழுத்துப் பரீட்சை [illegible] வடைந்து விட்டன—

கேட்கப்பட்ட ஆவணங்களான நற்சாட்சிப் பத்திரங்கள்— தொழில் திறன் பத்திரங்கள் சமூக சேவை அத்தாட்சிப் பத்திரங்கள் மூதலானவற்றை சாதுரியமான முறையில் பெற்று கையளித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகள் கிடைத்தன—

இவ்விதம ஆகக் கூடுதலான புள்ளிகள் பெற்றவர்களுக்கு பயி[illegible]

25-02-90 ஆம திகதியன்று ரூபவாஹினியில் ஒளிபரப்பான சேவன டிக்கெட் மாபெரும சீட்டிழுப்பின் பெறுபேறுகள்—

| | | | |
|---|---|---|---|
| 1 | 01001797 | — | 129 |
| 2 | 01001000 | — | 103 |
| 3 | 01001998 | — | 128 |
| 4 | 01001384 | — | 323 |
| 5 | 01000208 | — | 117 |

ஒரு லட்சம ரூபா வீதம ஐந்து லட்சாதிபதிகள்

உங்கள் வெற்றிக்குரிய டிக்கெட்டினை 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள சேவன செயலகத்தில் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்—

Year 2000 Shelter For All



காதல் வலைக்குள் சிக்கித் தவிக்கும பறவை, இன்ப நினைவுக்குள் ஏங்கித் தவிப்பதும இயற்கை, இங்கே காதலன் முகேஷ் அருகிலிருக்க ராதா நினைப்பது எந்தக் கண்ணனையோ தெரியவில்லை?, [படம- மனைவி ஒரு மாணிக்கம]

(இ-10)

மாதம நடுப் பகுதிக்கு முன்னர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது-

இதற்கான நடவடிக்கைகள் தற்போத மேற்கொள்ளப்பட்டுள்ளன-

இவ்வாசிரியர் நியமனம் தொடர்பான எழுத்துப் பரீட்சை நேர்முகப் பரீட்சை — முறையீட்டுப் பரிசீலனை அனைத்தும் முடி

சமூக சேவை அத்தாட்சிப் பத்திரஙகள் மூதலானவற்றை சாதுரியமான முறையில் பெற்று தையளித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகள் கிடைத்தன-

இவ்விதம ஆகக் கூடுதலான புள்ளிகள் பெற்றவர்களுக்கு பயிஉநர் ஆசிரியர் நியமனம் கிடைக்கவிருக்கின்றது- (இ—401)

# பாண்டியராஜன்—ரோகிணி புதுவாரிசு உருவாக்க முயற்சி

ராஜசேகர் டைரக்ட் செய்யும "புதுவாரிசு" படத்தின் படப்பிடிப்பு சென்னையை சுற்றி 18 நாட்கள் நடக்கிறது. இதில் பாண்டியராஜன், ரோகிணி உட்பட பலர் நடிக்கிறார்கள்.

உழைக்கும கரஙகள் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் சார்பில் "புதுவாரிசு" என்ற படத்தை பிரமாண்டமான முறையில் தயாரித்து வருகிறார்கள்

ஆர் எஸ் சந்திரசேகர் தயாரிப்பு மேற்பார்வையில் டி ஆர் செல்வம, ராஜாசிங ஆகியோர் தயாரிப்பு நிர்வாகத்தை கவனித்து வருகின்றனர்.

"படிக்காதவன்" "விக்ரம" "மாப்பிள்ளை" "கூலிக்காரன்" உட்பட பல வெற்றிப் படஙகளை இயக்கிய டைரக்டர் ராஜசேகர் இந்தப் படத்தை இயக்குகிறார்.

சித்ராலயா கோபு வசனம எழுத, சந்திரபோஸ் இசை அமைக்கிறார்.

பாண்டியராஜன் கதாநாயகனாக, மாறுபட்ட நகைச்சுவை வேடத்தில் நடிக்க, அவருக்கு ஜோடியாக ரோகிணி நடிக்கிறார்

மற்றும எஸ் எஸ் சந்திரன் டைரக்டர் ராஜா, சரத்குமார், ஆனந்தராஜ், திலீப், செந்தில்,



ரோகிணி

மஞ்சுளா உட்பட பலர் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்திற்காக ஏற்கனவே ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டது.

சென்னையை சுற்றி கொட்டிவாக்கம போன்ற பகுதிகளிலும சென்னை நகரில் உள்ள பிரபலபல 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்லும மற்றும பல இடஙகளிலும படப்பிடிபை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இதில் பாண்டியராஜன் ரோகிணி உட்பட பலரும கலந்து கொண்டு நடிக்கிறார்கள்.

அடுத்த கட்டமாக ஊட்டி, கொடைக்கானல், உட்பட பல்வேறு இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளில் படப்பிடிப்பு நடத்தப்படுகிறது. (இ-10)

## அக்னிகரங்களில் வில்லனை காப்பாற்றிய குழந்தை!

ஸ்ரீசத்தியசாயி பிலிம் புரொடக்ஷன்ஸ் தற்போது இந்தியில் வெளியான வெள்ளிவிழா படமான "பகவான் தாதா" என்ற படத்தை தமிழில் "அக்னி கரஙகள்" என்ற பெயரில் தயாரிக்கிறது-

ரஜனிகாந்த் ஸ்ரீதேவி ராமாயண தீபிகா உட்பட பலர் நடித்துள்ளனர்-

மருதகாசியின் மகன் மருதபரணி வசனம எழுத முத்துலிங்கம் பாடல்கள் எழுதியுள்ளார்- பாடல்களை மனோ—சித்ரா பாடியுள்ளனர்- மே பிரகாஷ் டைரக்ட் செய்துள்ளார்-

இளம் விதவை ஒருத்தி தன் இரண்டு வயது குழந்தையுடன் வாழ்ந்து வருகிறாள்- வில்லன் ஒருவன் அவளைக் கொலை செய்து விடுகிறான்-

அதைக் கண்ணால் பார்த்த கதாநாயகன் அவனை பிடிக்கும திட்டத்தில் ஆத்திரத்தில் கொலை செய்து விடும சூழ்நிலை ஏற்படுகிறது-

ஆனால் தன் காலைக் கட்டிப் பிடித்து அழுத சிறு குழந்தையின் எதிர்காலத்தை நினைத்து அவ்வாறு செய்யாமல் தடுமாறி நிற்கும நேரத்தில் வில்லன் தப்பித்து ஓடுகிறான்-

அவனை எவ்வாறு கண்டு பிடிக்கிறான் என்பதே கதை! (இ—10)

கடந்த வருடம்

# கொப்பி உற்பத்தி 27% வீழ்ச்சி

மட்டக்களப்பு, பெப் 28

வாழைச்சேனை காகித ஆலையில் அப்பியாசக் கொப்பி உற்பத்தி கடந்த வருடத்தில் 27 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது,

இத்தகவலை வாழைச்சேனை காகித ஆலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

அமைதியற்ற சூழ்நிலையும், கடந்த வருடத்தில் ஐந்து மாதஙகள் தொடர்ந்து வடகிழக்கு மாகாணஙகளில் மின்சாரம துண்டிக்கப்பட்டிருந்தமையுமே இந்த உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணம என அந்த அதிகாரி மேலும தெரிவித்தார்,

1988ஆம ஆண்டு 66,000 டசின் அப்பியாசக கொப்பிகள் உற்பத்தி செய்யப்பட்டன,

1989 ஆம ஆண்டில் 48,100 டசின் கொப்பிகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன,

இவ்வருடம இரு மாதஙகளில் 10,500 டசின் கொப்பிகள் உற்பத்தி செய்யப்பட்டன,

1988ஆம ஆண்டில் 4124 மெற்றிக் தொன காகிதம உற்பத்தி செய்யப்பட்டது,

1989 ஆம் ஆண்டில் 2750 மெற்றிக் தொன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது,

இவ்வாண்டில் கடந்த இரு மாதஙகளில் 192 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டது நாட்டில் நிலமை சுமுகமாக இருந்தால் இவ்வாண்டில் உற்பத்தி பெருகும, எனவும நாட்டிற்கு தேவையான அப்பியாசக் கொப்பிகளை உற்பத்தி செய்ய முடியும எனவும அந்த அதிகாரி தெரிவித்தார்,

(இ-து)


2000
Shelter For All



## "மௌனத்துக்குப் பின் கைகொடுப்பது எது?"

மௌனத்துக்குப் பின் கடைசி வரை கை கொடுக்க கப்றில் யாரிருக்கா?

கைசேதப்படும வேளையிலே சொத்தும சொகுசான வாழ்வும வீதி வரை நண்பர்கள், வீடு வரை சொந்த பந்தம இவர்களா காப்பாற்றுவார்கள்? இல்லை- அல்குர்ஆன் ஆகிய கடைசி வேதமே கப்றில் கைகொடுக்கும-

தொலைக்காட்சி பார்த்து சீர்கெடாமல் அல்குர்ஆனுடன் தொடர்பை ஏற்படுத்துஙகள்-

வகுப்பு நடைபெறும நேரம இரவு 6-30 — 8-30 வரை வயது வந்தவர்கள், சிறுவர்கள் அனைவரும அல்குர்ஆனைக் கற்றுக் கொள்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-

Madrasa Qadriya
68. St. Joseph Street.
Grandpass Colombo 14






புனித
ரமழான் மாதத்தில்
உம்ரு யாத்திரை
செய்வோருக்கு-
★ செலவு சொற்பம
★ திருப்திகரமான சௌகரியஙகள்
மேலதிக விபரஙகளுக்கு உடன் தொடர்பு கொள்ளுஙகள்
மக்கா டிரவல் சேர்விஸ்
தொலைபேசி- 29654

MAKKAH TRAVEL SERVICE
— Air Ticketing Allied Services & Tour Operators —
147/1 Maliban Street, Colombo—11

# தினபதி

தந்தி: "தினபதி" கொழும்பு-
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4423
— 1990 மார்ச் 2 —


## அரச நியமனம் கண்காணிக்க குழு தேவை

அரசாங்க நியமனங்கள் இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும.

இது அரசாங்கத்தின் கொள்கை.

அப்படியிருந்தும அரசாங்க நியமனங்கள் பலவும தொடர்ந்து பழைய முறைப்படியே வழங்கப்படுகின்றன.

அதனால் தமிழ், முஸ்லிம மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியமனங்கள் கிடைக்காமல் போய்விடுகின்றன. அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

சமீபத்தில் அரசாங்க நிர்வாக சேவையில் "சுப்ரா" வகுப்புக்கு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அவர்களில் தமிழரோ முஸ்லிமோ ஒருவர் கூட இல்லை.

கணக்காளர் சேவைக்கும அண்மையில் பலர் தெரிவு செய்யப்பட்டார்கள். அதிலும தமிழர்களுக்கும முஸ்லிமகளுக்கும உரிய இன விகிதாசாரப்படி இடங்கள் கிடைக்கவில்லை.

இந்த விஷயங்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

ஆளும ஐக்கிய தேசியக் கட்சி எம பி யும அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுப் பிரதிக் கொறடாவுமான அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் அரசாங்க உத்தியோகம வழங்குவதில் இன விகிதாசாரம கடைப்பிடிக்கப்படாத குறைபாட்டை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததோடு நிற்கவில்லை.

அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும என்றும [illegible]

# மனித ஜென்மம் வீணாகி போக விட்டு விடாதீர்!

## தெய்வ பக்தியே நம்மை கரையேற வைக்கும்

புராணங்களில் ஸ்ரீமத் பாகவதம விசேஷமானது- அதிலும ஸ்ரீகிருஷ்ணாவதாரம பெருமை மிக்கது-

பகவான் கண்ணனாக வந்து ஆயர்பாடியில் விளையாடியது- வெண்ணை, பால், தயிர் திருடியது, மாடு மேய்த்தது முதல், பூதனாவாதம், சகடாசுரவதம், காளிங்க நர்த்தனம, கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்து ஆயர்பாடி மக்களை காப்பாற்றியது, கோபிகைகளுடன் ராசக்கிரீடை புரிந்தது போன்ற விசயங்களை பக்தர்கள் படித்தும கேட்டும மகிழ்வார்கள்-

படிக்கும போதும, கேட்கும போதுமே இவ்வளவு மகிழ்ச்சி என்றால் கண்ணனோடு கொஞ்சி விளையாடி, அவனோடு வாழ்ந்தவர்களின் மகிழ்ச்சி எப்படி இருந்திருக்கும!

அதிலும அந்த கோபிகைகள், கண்ணனிடம பக்தியை விட அதிகமாக பிரேமையை வைத்திருந்தார்கள்-

கண்ணனைக் காணாத ஒரு விநாடியை ஒரு யுகமாக நினைத்தார்கள்-

இப்படிப்பட்ட கோபிகைகளை விட்டு விட்டு, கண்ணன் மதுரா நகரம போய் விட்டான்- அதனால் கோபிகைகள் மிகுந்த துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்-

பகவான், உத்தவரை அனுப்பி கோபிகைகளை சமாதானம செய்து விட்டு வருமபடி அனுப்பினார்-

உத்தவர் கோகுலத்துக்கு வந்து கோபிகைகளைக் கண்டார்- அவர்கள் கண்ணனிடம வைத்திருந்த பக்தி, பிரேமையைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனார்-

அப்போது அவர் மனம எண்ணியது- "சகல ஜகத்ரூபியான கோவிந்தரிடத்தில் இந்த கோபிகைகள் இடை விடாமல் பக்தி செய்வதால் இவர்களே மேலானவர்கள்-

மகரிஷிகளும, நாமும சமசாரத்திலிருந்து பயந்து ஒதுங்கி வந்து கிருஷ்ணனிடம பக்தி செய்கிறோம-

இவர்கள் அப்படியல்ல, சதா காலமும கிருஷ்ணனையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்- பகவானிடம பக்தி செய்து, அவருடைய கதைகளைக் கேட்டு ஆனந்தப்படுபவர்களே பாக்யசாலிகள்-

இப்படிப்பட்டவர்கள் எந்த ஜாதியில் பிறந்தவர்களானாலும மேலானவர்களே!

"பகவானிடம பக்தி செய்யாதவர்கள் எந்த உயர் குலத்தில் பிறந்திருந்தாலும அதில் பெருமை என்ன இருக்கிறது?

இந்த கோபிகைகள் காட்டில் வசிப்பவர்கள்- பக்தி பூஜை முதலியவைகளைப் பற்றி ஏதுமறியாதவர்கள்- ஆனாலும கண்ணனிடம அபாரமான பக்தியும, பிரேமையும கொண்டிருக்கிறார்கள்-

அமிர்தத்தை மூடன் புசித்தாலும அவனுக்கு அது சுகத்தை உண்டு பண்ணுமல்லவா?

அது போல் அஞ்ஞானியாயினும பகவானிடம பக்தி வைத்தால் பகவான் அவனுக்கு க்ஷேமத்தை அளிக்கிறார்-

எந்த கோபிகைகள் பந்துக்களையும, தர்மத்தையும விட்டு வேதங்களாலும தேடக் கூடிய பகவானுடைய பாதத்தை அடைந்திருக்கிறார்களோ அவர்களுடைய பாதத் தூளிகைகளை அடைந்துள்ள இந்த பிருந்தாவனம, மரம, செடி, கொடிகளும மேலானவைகளே!

எந்த கோபிகைகள் கிருஷ்ண சரிதத்தை கானம செய்வதால் மூவுலகையும பரிசுத்தப்படுத்துகிறார்களோ, அந்த கோபிகைகளின் பாதத் தூளியை அடிக்கடி நமஸ்கரிக்கிறேன்-

— இப்படி உத்தவர் கூறுகிறார்-

பகவத் பக்தி ஒன்று தான் மனித ஜென்மத்தைக் கரையேற வைக்கும மற்ற டிராமா, சினிமா, போன்றவைகளெல்லாம வாழ் நாளை வீணாக்கும சாதனங்களே!

இவைகளெல்லாம மனித வாழ்க்கையில் ஒதுக்கித் தள்ள முடியாத தான்-

ஆனாலும, நாம ஒதுங்கி வாழவும, பகவத் சிந்தனை ஏற்படவும், புத்தி அதன் பக்கமே சாய்ந்து நிற்கவும பழகிக் கொள்ள வேண்டும-

## வெள்ளி விருந்து

இந்த மனித ஜென்மத்தை விட்டால் வேறு எந்த ஜென்மத்தை, என்ன பிறவியில் பக்தி செய்ய முடியும?

ஒரு கோயிலுக்குப் போக முடியுமா? ஒரு தெய்வ தரிசனம செய்ய முடியுமா? ஒரு தான தர்மம் செய்ய முடியுமா? ஒரு சத் விசயத்தைக் கேட்க முடியுமா?

அதனால் மனித ஜென்மம வீணாகக் கூடாது- மேலும், மேலும உயர்ந்த இடத்தை அடைய வேண்டும- அதற்கான முயற்சி செய்ய வேண்டும என்கிறார்கள்-

ஆனால், பகவானைப் பற்றி சிந்திப்பதை விட்டு, விட்டு வேறு எதை பற்றியெல்லாமோ இரவு பகல் தூக்கமில்லாமல் சிந்திக்கிறார்களே! இது தான் விசித்திரம! (ம-10)

— வைரம் ராஜகோபால் —

# இந்திய படை வெளி....

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இல்லை. இலங்கையே அதில் அக்கறை கொள்ள வேண்டும என இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு குஜ்ரால் கூறி உள்ளார். என சுட்டிக் காட்டிய நிருபர்கள் இது தொடர்பாக அமைச்சரின் கருத்தைக் கேட்டனர்.

இலங்கை - இந்திய நட்புறவு ஒப்பந்தம இரு நாடுகளின் நன்மைகளையும மையமாகக் கொண்டே ஆராயப்பட்டது.

இது தொடர்பாக இருபக்க கருத்துகளும ஆலோசனைகளும [illegible] களில் பதில் அனுப்பப்படும என உறுதி அளித்தார்.

ஆனால் ஒரு வாரத்தின் பின்னர் இந்திய அமைதிப் படை வாபஸ் பெறப்படுவதற்கு முன் அதாவது மார்ச் 31 ஆம திகதிக்கு முன் ஒப்பந்தம கைச்சாத்திடப்பட வேண்டும என்று எனக்கு ஒரு செய்தி கிடைத்தது.

இந்தச் செய்தி ஒரு நிபந்தனையைப் போலவும எமமை வற்புறுத்துவது போலவும அமைந்திருந்தது. இதனாலேயே இந்திய அமைதிப்படை இம்மண்ணில் இருக்கும வரை ஒப்பந்தம செய்வதில்லை என்று தீர்மானிக்க [illegible]

இலங்கை ஒரு ஜனநாயக சுதந்திர நாடு. எமமை எவரும வற்புறுத்தவோ நிபந்தனைகளை விதிக்கவோ முடியாது.

இவ்விடயத்தில் நாம அவசரப்படவும முடியாது. ஏற்கனவே அவசரப்பட்டு செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம நாட்டில் அமைதியை கெடுத்து விட்டதோடு, பல்லாயிரம கோடி அரச உடைமைகளையும அழித்து விட்டது.

நட்புறவு ஒப்பந்தம தொடர்பாக அரசியல் கட்சிகளையும நாடாளுமன்றத்தையும ஆலோசித்தே இறுதி முடிவு எடுக்க [illegible]

# முதல் அமைச்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

முடியாது-

இப்படியான நிலையில் புலிகள் வடக்கு, கிழக்கு மாகாண சபையை கலைக்க வேண்டும என்று கூறுவதால் ஜனாதிபதியினால் அதை கலைத்துவிட முடியுமா? என பத்திரிகையாளர்கள் அமைச்சரிடம கேட்டனர்-

சில விசேட அதிகாரங்களின் பேரில் ஒருவேளை அதனை கலைக்கும அதிகாரம ஜனாதிபதிக்கு இருக்கலாம- எனினும மாகாண சபைகள் [illegible] சட்டம தொடர்பாக தனக்கு போதிய விளக்கம இல்லை என்று அமைச்சர் பதிலளித்தார் [illegible]

அமைச்சர் சட்டத்தில் இடம இருப்பின் அவர்கள் எங்கேயும கூட்டத்தை நடத்தலாம- காடுகளிலும் சரி, நடுக் கடலிலும சரி. கூட்டத்தை நடத்தினாலும எனக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறினார்-

(ந-ய)

## உழவு இயந்திரங்கள்

கோப்பாய், பெப் 28

ஐந்து லட்சம ரூபா பெறுமதியான நீர் தாங்கிகளையும [illegible]

## செய்தித் திரட்டு

### நூல நிலையம

மூதூர் பெப் 28

சுங்குவேல் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும மாணவர்களின் நலன் கருதி இவ் வித்தியாலயத்தில நூல நிலையம ஒன்று ஆரமபிக்கப்பட்டுள்ளது-

இந்நூல் நிலையத்தினை இவ் வித்தியாலய அதிபர் வே பூரஸ் கந்தராஜா அண்மையில் ஆரமபித்து வைத்தார்-

இந்நூல் நிலையத்திற்குத் தேவையான நூல்களை திருகோணமலை மாவட்ட நலன் புரிச் சங்கத்தினரும பெற்றோரும நலன்விருமபிகளும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்-

(ஐ—401)

### தையல பயிற்சி வகுப்புகள்

கொழுமபு மார்ச் 1

இலங்கை இஸ்லாமிய நிலையம தையற் பயிற்சி வகுப்புக்களை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளது-

ஜூக்கி மெசின் தையற் பயிற்சி இரண்டு மாதங்களுக்கும ஆடை தயாரிப்பு பயிற்சி ஆறு மாதங்களுக்கும நடைபெறும என்று நிலையப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்-

திங்கள் செவ்வாய் புதன் வியாழன் ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும அல்லது மாலை 2 மணியிலிருந்து 4 மணி வரையும இந்த வகுப்புகள் நடத்தப்படும-

(ஐ—007)

### வெலிகாமத்தில கண் நோய்

வெலிகாமம், பெப் 28

வெலிகாமம் பிரதேசத்தில் தற்போது கண்நோய் மிக வேகமாகப் பரவி வருகிறது-

இந்நோயினால் பாதிக்கப்பட்டோர்களில் பெருமபகுதியினர் வெலிகாமம் கண் ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர்-

வெலிகாமத்தில் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக நிலவி வரும கடும வரட்சியே இதற்குக் காரணம எனக் கூறப்படுகிறது-

(ஐ—331)

அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

அதாவது இன விகிதாசார அடிப்படையில் அரசாங்க நியமனங்கள் வழங்கப்படுகின்றனவா என்று கவனித்து உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுப்பதற்குக் கண்காணிப்புக் குழுக்களை எல்லா அமைச்சுக்களிலும் நியமிக்குமாறு ஜனாதிபதியை அல்ஹாஜ் அஸ்வர் கேட்டிருக்கிறார்.

கண்காணிப்புக் குழு அமைப்பது நிரந்தர பயன் அளிக்கக் கூடிய ஏற்பாடு ஆகும்.

அல்ஹாஜ் அஸ்வரின் முயற்சியால் தேசிய இளைஞர் பயிலுநர் மன்றம் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்த இருந்த சுருக்கெழுத்து தட்டெழுத்து பயிற்சி வகுப்புகளைத் தமிழ் மொழியிலும் நடத்த இணங்கியுள்ளது. பல தமிழ், முஸ்லிம் இளைஞர்களும் யுவதிகளும் பயிற்சி பெறுவார்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டால் அல்லது அநீதி இழைக்கப்பட்டால் அஸ்வர் சும்மா பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார்.

உடனே உரிய இடத்தில் குரல் எழுப்புவார். வேண்டிய தகவல்களை எல்லாம் சேகரித்து வைத்துக் கொண்டு சந்திக்க வேண்டியவர்களை எல்லாம் சந்தித்து பேசி நிவாரணம் தேடி விடுவார்.

அப்படிப்பட்டவர் இந்த நாடாளுமன்றத்திலே இடம் பெற்றிருப்பது தமிழ் பேசும் மக்களின் அதிஷ்டம் என்றே சொல்லலாம்.

அல்ஹாஜ் அஸ்வருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேண்டும்.

---

...ஆராயப்பட்டது.

இது தொடர்பாக இருபக்க கருத்துகளும் ஆலோசனைகளும் பல்வேறு மட்டங்களில் பரிசீலனை செய்யப்பட்டன.

நண்பர் குஜ்ராலுடன் நான் மூன்று முறை இது தொடர்பாக பேச்சு வார்த்தைகளை நடத்தி உள்ளேன்.

நட்புறவு ஒப்பந்தம் தொடர்பாக இன்னும் இரண்டு வாரங்... அமைதிப்படை இம்மண்ணில் இருக்கும் வரை ஒப்பந்தம் செய்வதில்லை என்று தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியா இப்படியான ஒரு செய்கியை அனுப்பி வைக்காமல் இருந்திருந்தால் ஒருவேளை இந்த நட்புறவு ஒப்பந்தம் இவ்வேளையில் கைச்சாத்திடப்பட்டிருக்கலாம்.

...பாக அரசியல் கட்சிகளையும் நாடாளுமன்றத்தையும் ஆலோசித்தே இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

நாம் இந்தியாவுடன் நல்ல உறவுகளை வளர்க்கவே விரும்புகிறோம். இந்திய அமைதிப்படை முற்றாகச் சென்ற பின் ஜனாதிபதி பிரேமதாச இந்தியப் பிரதமருடன் முதலாவதாக தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

இப்படி திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார். (ந—ய)

...டம் தொடர்பாக தனக்கு போதிய விளக்கம் இல்லை என்று அமைச்சர் பதிலளித்தார்.

எனினும் ஜனாதிபதியின் ஆலோசகரான திரு பிரட்மன் வீரக்கோன் இக் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும் என பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

இவ் வேளையிலேயே பிரட்மன் வீரக்கோன் மாகாண சபையை கலைப்பது தொடர்பான விடயத்தில் சட்டத் தெளிவு இல்லை என்று குறிப்பிட்டார்.

கூட்டங்களை நடத்துவது தொடர்பாக பதில் அளித்த...

---

கோப்பாய், பெப் 28

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நீர் தாங்கிகளையும் 3 இரண்டு சில்லு உழவு இயந்திரங்களையும் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியுள்ளது.

வாதரவத்தை, வேலணை நெடுந்தீவு பகுதி மக்களின் குடிதண்ணீர் விநியோகத்திற்கு பயன்படுத்துவதற்கு நீர் தாங்கிகளையும், இரண்டு சில்லு உழவு இயந்திரங்களையும் வழங்கியுள்ளது.

(ஐ—142)

---

# 4 பல்கலைகளை

## தேசிய பல்கலைகளாக மாற்றுமாறு சிபார்சு

கொழும்பு மார்ச் 1

நான்கு பல்கலைக்கழகங்களை தேசிய பல்கலைக்கழகங்களாகவும் ஏனைய பல்கலைக்கழகங்களை பிரதேச பல்கலைக்கழக நிலையங்களாகவும் மாற்றியமைக்குமாறு இளைஞர் அமைதியின்மைக்கான தீர்வை ஆராயும் ஆணைக்குழு அரசுக்கு சிபார்சு செய்துள்ளது.

இதன்படி கொழும்பு - ருகுணு யாழ்ப்பாணம் - பேராதனை ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்களாக மாற்றியமைக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறே களனி - ஸ்ரீஜெயவர்த்தனபுர - மட்டக்களப்பு ஆகிய பல்கலைக்கழகங்கள் பிரதேச பல்கலைக்கழக மத்திய நிலையங்களாக மாற்றியமைக்கப்படும்.

இளைஞர் அமைதியின்மைக்கான தீர்வாகவும் அதிக எண்ணிக்கையான மாணவர் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கு வசதி அளிப்பதற்காகவுமே இத்திட்டத்தை செயல்படுத்த மேற்படி ஆணைக்குழு முடிவு செய்தது என்று அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

இதேவேளை இதனை செயல்படுத்துவது தொடர்பான திட்டத்தை வகுக்குமாறு அரசு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மூலம் உபவேந்தர்களை கேட்டுள்ளது.

ஆயினும் பல்கலைக்கழகங்களை பிரதேச பல்கலைக்கழக மத்திய நிலையங்களாக மாற்றி அமைப்பதானால் எதிர்பார்த்த பலனை பெற முடியாது என்று பல்கலைக்கழக உபவேந்தர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இத்திட்டத்துக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிகாரேயிடம் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர்.

இவற்றுக்கு புறம்பாக உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீதை சந்தித்து இது தொடர்பாக விளக்கமளிக்கவும் உபவேந்தர்கள் முடிவு செய்துள்ளனர். (ந—வ).

---

கண்டி, மாத்தளை மாவட்டங்களில்

# தனியார்வாகனங்கள்குறித்து பொதுமக்கள் அதிருப்தி

அக்குறணை பெப் 28

கண்டி மாவட்டத்திலும் மாத்தளை மாவட்டத்திலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் வாகனங்கள் குறித்து பொதுமக்கள் அதிருப்தி அடைந்து வருகின்றனர்.

ஒருசில பெரிய தனியார் வாகனங்கள் குறிப்பிட்ட அளவே பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன.

ஆனால் சிறிய எண்ணிக்கையை ஏற்றிச் செல்லக் கூடிய தனியார் வாகனங்கள் கூடுதலான பிரயாணிகளை ஏற்றிக் கொள்வதுடன் துரிதமாக செல்ல முடியாத அளவு தரிப்பிடங்களில் நிறுத்தி நிறுத்தி பிரயாணிகளை ஏற்றிக் கொள்கின்றன.

இவை தமது லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன என் மக்கள் குறைபட்டு வருகின்றனர்.

சிறிய வாகனங்களில் எவ்விதமான வசதிகளோ அன்றி நின்று கொண்டு செல்லக் கூடிய வசதிகளோ இல்லை.

கண்ணாடிகள் உடைந்திருப்பதால் மழை பெய்யும் போது கூரைப் பக்கத்தால் தண்ணீர் வடிந்த பிரயாணிகளுக்குத் தொல்லை கொடுப்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது சேவையிலீடுபடுத்தப்படும் ஒரு சில தனியார் சிறிய வாகனங்கள் ஒதுக்கப்பட வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன.

அதுவும் மாலை வேளைகளில் தனியார் வாகனங்கள் ஓடுவது மிக மிகக் குறைவு. போக்குவரத்துச் சபை பஸ்களே மாலை ஐந்து மணிக்குப் பின் ஓடுகின்றன.

எனவே போக்குவரத்துச் சபையினர் ஒரு திட்டமிட்ட சேவையை காலை தொடக்கம் இரவு வரை நடத்த வேண்டும்.

குறைவான கட்டணம் தற்போது போக்குவரத்து சபை பஸ் சேவையில் எடுப்பதால் பிரயாணிகள் இதனையே நாடுகின்றனர்.

எனவே இச்சேவைகளை ஒழுங்கமைத்து நடத்த அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

தனியார் பஸ் சேவைகளது நிலைமைகள் குறித்தும் அதிகாரிகள் பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

(ஐ—411)

---

வரும் கடும் வரட்சியே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

(ஐ—331)

## மாட்டிறைச்சி தட்டுப்பாடு

நீர்கொழும்பு பெப் 28

நீர்கொழும்புப் பகுதியில் மாட்டிறைச்சிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக முன்பு ஒரு கிலோ 50 ரூபாவாக விற்கப்பட்ட இறைச்சி இப்போது 60 — 65 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மன்னார்ப் பகுதியிலிருந்து மாடுகளை வாகனங்களில் ஏற்றி வருவதில் பலவிதமான குறுக்கீடுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக மாட்டிறைச்சிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

(ஐ—223)

## யானைகள் அட்டகாசம்

ஏறாவூர் பெப் 28

ஏறாவூர் வடக்கு வயல் பிரதேசங்களில் யானைகளின் அட்டகாசம் எல்லை மீறியுள்ளதாயும் இதனால் தமக்கு நாளாந்தம் நட்டம் ஏற்படுவதாயும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இப்பகுதியில் இரண்டு விவசாயிகள் யானைகளால் அடித்துக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் யானைகளை அடக்க இப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாயும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ—073)

பிரதிநிதிக்கு விசா வழங்க மறுத்ததன் எதிரொலி

# ஐ. நா சபையிலிருந்து

# இந்தியாவை வெளியேற்றுக

## செயலாளர் நாயகத்திடம்

### அஸாத் காஷ்மீர் பிரதமர் கோரிக்கை

இஸ்லாமாபாத், மார்ச் 1

**ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து இந்தியாவை வெளியேற்ற வேண்டும். இவ்வாறு பாகிஸ்தான் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அஸாத் காஷ்மீர் பிரதமர் சிக்கந்தா ஹயட் கேட்டிருக்கிறார்.**

காஷ்மீருக்கு ஐ நா பிரதிநிதி ஒருவர் விஜயம செய்யும திட்டத்தை இந்தியா ஏற்க மறுத்தது தெரிந்ததே. அந்தப் பிரதிநிதிக்கு விசா வழங்கவும இந்தியா மறுக்கலாம என கருத்து வெளியிடப்பட்டது.

எதிர்வரும 7 ஆம திகதி ஐ நா பிரதிநிதி காஷ்மீர் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்.

இந்தியாவின் உள்ளூர் விவகாரஙகளில் தலையிட ஐ நா சபை முயற்சிக்கிறதென ஐ நா பிரதிநிதியின் உத்தேச விஜயம குறித்து இந்தியா கண்டித்திருந்தது.

ஐ நா பிரதிநிதி இந்தியா வருவதை ஏற்க மறுத்த காரணத்தால் அஸாத் காஷ்மீர் பிரதமர் இந்தியாவை ஐ நா சபையிலிருந்து வெளியேற்ற வேண்டுமெனக் குரல் எழுப்பியிருக்கிறார்.

காஷ்மீர் நெருக்கடி குறித்து ஆராயவே ஐ நா சபை பிரதி நிதி ஒருவரை இந்தியாவுக்கு அனுப்பத் திட்டமிட்டது.

ஐ நா சபையில் அஙகத்துவம வகிக்கும இந்தியா இவ்வாறு செயல்படுவதை ஏற்க முடியாது.

ஐ நா செயலாளர் நாயகம ஜாவியர் பெரெஸ் டி கியுலர், இந்தியாவை தண்டிக்க வேண்டும. இந்தியாவை ஐ நா சபையிலிருந்து வெளியேற்ற வேண்டும.

அஸாத் காஷ்மீர் பிரதமர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் வெளியிட்டிருக்கும அறிக்கையொன்றில் இது பற்றித் தெரிவித்துள்ளார். (எ)

### கைரோஹோட்டல் விபத்து: 10 பேர் பலி

கைரோ, மார்ச் 1

கைரோவில் ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

எரிந்த கட்டிடத்திற்குள் ...

ஹொங்கொங் செல்ல முயன்ற

## வியட் அகதிகள் திருப்பியனுப்பப்பட்டனர்

ஹொஙகொங மார்ச் 1

சீனாவுக்குள் அடைக்கலம புக முயன்ற 77 ஆயிரத்துக்கு மேற்பட்ட வியட்நாமியர்களை குவாஙசி மாகாணத்திலுள்ள சீன அதிகாரிகள் திருப்பியனுப்பிவிட்டனர்.

மேற்படி அடைக்கலம புக முயன்றோர் வியட்னாமை அடுத்துள்ள குவாஙசி மாகாணத்தினூடாக ஹொஙகொஙகுக்கு கரை மார்க்கமாக செல்லவிருந்தனர்.

வியட்னாம அகதிகளை பற்றிய இந்த விவரம ஹொஙகொங பத்திரிகையில் கடந்த வியாழக்கிழமை வெளிவந்தது. பெயர் குறிப்பிடப்படாத சக்திகள் குவாஙசி மாகாண அரசுடன் சமபந்தப்பட்டிருப்பதாகவும இச்செய்தி கூறுகிறது.

வியட்னாமிய அகதிகள் சமபந்தமான இச்செய்தியை ஹொஙகொங அதிகாரிகள் உறுதி செய்யவில்லை ஆனால் வியட்னாமிய அகதிகள் தமது நாட்டு எல்லைப்புறமாக ஹொஙகொங செல்வதை தடுப்பதில் சீன அதிகாரிகள் ஒத்துழைப்பதாகச் சொன்னார்கள்

இவ்வெல்லைப்புறமாக 2092 வியட்னாமியர் கடந்த வருடம ஹொஙகொங வந்தனர் (எ—பி)

7 வருடங்களின் பின்

## நிக்கரகுவாவுக்கு மேற்கு ஜெர்மனி நிதி உதவி

பொன் மார்ச் 1

நிக்கரகுவாவில் அண்மைய தேர்தலில் வெற்றி பெற்ற புதிய அரசாஙகம் ஆட்சியை கைப்பற்றியதையடுத்து நிக்கரகுவாவுக்கு 7 வருடஙகளின் பின்னர் மீண்டும உதவி வழஙகுவதென மேற்கு ஜெர்மனி தீர்மானித்துள்ளது.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிக்கரகுவாவுக்கான அதிகாரபூர்வ நிதி உதவிகளை மேற்கு ஜெர்மனி இடைநிறுத்தியிருந்தது.

இவ் வகையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது வழஙகப்படவிருக்கும 5 கோடி மார்க் நிதியை எவ்விதம பயன்படுத்துவது என்பது பற்றிய பேச்சுவார்த்தை விரைவில் ஆரமபிக்கப்படும் என மேற்கு ஜெர்மன் நிதியுதவி அமைச்சர் ஜெர்மன் வார்னெக் கூறினார்.

நிக்கரகுவாவுக்கு மேற்கு ஜெர்மனி அதிகாரபூர்வ நிதி உதவியை இடைநிறுத்திய போதும தனிப்பட்ட உதவி அமைப்புகளினால் சுமார் 4 கோடி மார்க் நிதி உதவி வழஙகப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.


நிதி உதவி அமைச்சர் வார்னெக்கே கடந்த ஜூனில் நிக்கரகுவாவுக்கு விஜயம் செய்தபோது 36 லட்சம மார்க் நிதியை உதவியாக வழஙகியிருந்தார். தேர்தலில் கொன்ட்ராக்களை பாவிப்பதற்காக இந்த நிதி பயன்படுத்தப்பட்டது. (ரு)

### குண்டுவெடிப்பில் நால்வர் பலி

இந்தியா மார்ச் 1

வட இந்தியாவில் ரயில் நிலையமொன்றில் நடந்த குண்டு வெடிப்பொன்றில் 4 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

உத்தரபிரதேச உள்ள மீருட்டில் இக்குண்டு வெடிப்பு இடமபெற்றது. (எ)



### அரிசோனாவில் தொலைநோக்கி

மேற்கு ஜெர்மனி நிறுவனமொன்று "மக்ஸ் ரேடியோ அஸ்டொனோ" நிறுவனம மற்றும் அரிசோனா பல்கலைக்கழக தேவைகளுக்கென அரிசோனாவில் அமைக்கவிருக்கும தொலைநோக்கியொன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

அரிசோனாவில் 10,500 அடி உயரம் கொண்ட மவுண்ட் கிரஹாம் மலையில் இந்த தொலைநோக்கி அமைக்கப்படும. (எ—*த)

### பூமி அதிர்ச்சி:

லொஸ் ஏன்ஜலிஸில் புதன்று ஏற்பட்ட பயஙகர பூமி அதிர்ச்சி ஒன்றில் 40 மாடிக் கட்டிடஙகள் அதிர்வுற்றன.

வாகனஙகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. நவீன சந்தைகளில் இருந்த விற்பனைப் பொருள்களும விழுந்து நொறுஙகின.

புதிய நிர்வாகத்தின் கீழ்

## அமெரிக்காவுடன் நல்லுறவு: வளர்ப்பதெனஜப்பான்உறுதி

டோக்கியோ, மார்ச் 1

... நாம் விருமபுகிறோம. அப்போதுதான் ஜப்பானுக்கும ...

இவ்வாறு ஜப்பான் பிரதமர் கூறினார்.

பேர் உயிரிழந்தனர்.

எரிந்த கட்டிடத்திற்குள் இருந்த சடலங்கள் இழுத்தெடுக்கப்பட்டன.

நான்கு பெண்கள், இரு ஆண்கள் இதில் அடங்குவர்.

கைரோ சுற்று வட்டாரத்தில் உள்ள ஹெலியோ பொலீஸ் என்னுமிடத்தில் இந்த ஹோட்டல் அமைந்துள்ளது.

31 பேர் காயமடைந்ததாகவும அறிவிக்கப்படுகிறது. (எ)

தொங பத்திரிகையில் கடந்த வியாழக்கிழமை வெளிவந்தது-

ஹொங்கொங வந்தனர் (எ-ரி)

பொருள்களும விழுந்து நொறுங்கின-

# உலகச் செய்திகள்

# நிக்கரகுவாவில் உடனடி யுத்த நிறுத்தம் அமுலாகும்

## டானியல் ஓர்டேகா உத்தரவு

மனாகுவா, மார்ச் 1

நிக்கரகுவாவில் உடனடி யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி டானியல் ஓர்டேகா உத்தரவிட்டிருக்கிறார். அமெரிக்க ஆதரவு கொன்ட்ரா கிளர்ச்சியாளர்களுடன் நடத்தும யுத்தத்தை கைவிடும படியே ஓர்டேகா பணித்திருக்கிறார்.

சர்வதேச கண்காணிப்பின் கீழ் ஆயுதங்களைக் கீழே வைக்குமபடி ஓர்டேகா கேட்டிருக்கிறார்.

கிளர்ச்சியாளர்களுக்கு உதவுவதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும.

கொன்ட்ரா கிளர்ச்சியாளர்களை ஒழிப்பதற்கு உள்ளூரில் ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும. அதற்குத் தேவைப்படும நிதி உதவிகளை வழங்கி உதவ வேண்டும. இவ்வாறு ஓர்டேகா அமெரிக்காவைக் கேட்டிருக்கிறார். அயலில் உள்ள ஹொண்டுராவில் கொன்ட்ரா தளங்களை மூடிவிட வேண்டுமெனவும ஓர்டேகா தெரிவித்துள்ளார்.

ஓர்டேகாவின் சான்டினிஸ்ட் அரசாங்கம கடந்த ஞாயிறு நடந்த தேர்தலில் தோல்வி கண்டது. திருமதி வயலெட்டோ சமோரோவின் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கூட்டு கட்சி தேர்தலில் வெற்றியீட்டியது.

எதிர்வரும ஏப்ரல் 25 ஆம திகதி ஓர்டேகா தமது அதிகாரங்களை சமோரோவிடம கையளிப்பார்.

இதேவேளையில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் நிர்வாகம நிக்கரகுவா மீதான பொருளாதாரத் தடையை விரைவில் தளர்த்திவிடும. புதிய அரசாங்கத்துக்கு நிதி உதவிகளை வழங்கவும முன் வந்துள்ளது. (எ)

### பலஸ்தீனியருடன் பேச்சு நடத்தும்

# அமெ. அழைப்பை இஸ்ரவேல் ஏற்குமா?

## விரைவில் முடிவு தெரியும்

ஜெருசேலம மார்ச் 1

பலஸ்தீனியருடன் பேச்சுவார்த்தை நடத்துமபடி அமெரிக்கா விடுத்த குரலை முதன் முறையாக இஸ்ரவேல் ஏற்பதா இல்லையா என்று விரைவில் முடிவு செய்யும என்று இஸ்ரவேல் முதலமைச்சர் யிற்ஷாக் ஷமீர் கூறினார்

இன்னும சில நாட்களிலோ, அல்லது வாரங்களிலோ சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி முடிவெடுப்போம என்ற முதலமைச்சர் எப்பக்கம வாக்குகள் சாரும என்று சொல்ல மறுத்து விட்டார்

74 வயதான லிக்குவிட் கட்சித் தலைவர் ஷமீர் "அமெரிக்கா இஸ்ரவேலைச் சலுகைகள் செய்ய நெருக்குவதாகவும அது நமநாட்டின் பாதுகாப்புக்குப் பங்கம விளைவிக்கும" என்றும குற்றம சாட்டினார்-

இஸ்ரவேல் முதல்வரின் கோரிக்கைகளின் படி மேற்குக் கரையோர காசாப் பகுதியில் நடக்கவிருக்கும தேர்தல் சமபந்தமான கைரோ பேச்சுவார்த்தை, யார் பலஸ்தீனியரின் பிரதிநிதிகள் என்ற இழுபறியில் அமிழ்ந்து போனது-

(எ-ரி)

டோக்கியோ, மார்ச்- 1

அமெரிக்காவுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளவு வசதியான சமூகமொன்றைத் தோற்றுவிக்கவும் நா உறுதி பூண்டுள்ளோம- இவை இரண்டும எமது புதிய நிர்வாகத்தில் முக்கிய இலக்குகளாக அமையப் போகின்றன-

இவ்வாறு கூறினார் ஜப்பான் பிரதமர் டொஷிக்கி கைபூ-

ஜப்பானிய புதிய அமைச்சரவையை அமைத்த பின் நடந்த முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் கைபூ மேற்கண்ட கருத்தினை வெளியிட்டார் பத்திரிகையாளர் மாநாடு பிரதமர் இல்லத்தில் நடைபெற்றது-

அமெரிக்காவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்த நா விரும்புகிறோம- அப்போதுதான் ஜப்பானுக்கும அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு நெருக்கமுடையு - வர்த்தக பிரச்சினைகளில் சிறந்த பலாபலன்களையும நாம் எதிர்பார்த்துள்ளோம-

ஜப்பானில் புதிய காணிக் கொள்கைகளை நா அறிமுகப் படுத்துவோம- பாவனைப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும-

காணி சீர்திருத்தச் சட்டத்தில் எனது முழுக் கவனத்தையும செலுத்தத் திட்டமிட்டிருக்கிறேன்-

இவ்வாறு ஜப்பான் பிரதமர் கூறினார்-

(எ)

## கைதிகளுக்கு மன்னிப்பு

சோல் மார்ச் 1

தென் கொரியாவில் 1,100 கைதிகளுக்கு புதன்கிழமை மன்னிப்பு வழங்கப்பட்டது-

இந்த 1,100 பேரில் 22 பேர் இடதுசாரிகளாவர் தென் கொரிய ரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது-

ஜப்பானிய காலனித்துவ ஆட்சியின் 1919 ஆம் ஆண்டு எழுச்சியை வியாழனன்று தென் கொரியா நினைவு கூருகிறது இதன் பொருட்டே கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது-

தென் கொரியாவில் இயங்கும தேசிய பாதுகாப்பு திட்டமிடல் நிறுவனம அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் அதிக கவனம செலுத்தி வருகிறது- அதன் முயற்சியினால் உளவு விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பலர் கைது செய்யப்பட்டுமுள்ளனர்-

(எ)

## 21 பேர் பலி

லீமா, மார்ச்- 1

பேரு வட கிழக்குக் காட்டுப் பகுதியில் இடம்பெற்ற மண் சரிவொன்றில் 21 பேர் உயிரிழந்தனர்-

சுமார் 200 கிராமத்தவர்களைக் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது-

300க்குமதிக குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்துள்ளன-

(எ)


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும்
அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய
நூல்கள் தொடர்பான
உங்கள் தேவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன
அன்ட் கம். லிமிட்.
217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11.
தொலைபேசி- 23981—84.

# பிஸ்மில்லாஹ்வை என்றும் ஓதி நன்மைகளை அடைவோம்

—— புகாரி எம். இப்றாஹீம் ——

ஒரு மனிதனின் ஆத்மீக வாழ்வு சுறுசுறுப்பாகும் பொழுது தான் அவனுடைய லௌகீக வாழ்வும் மகிழ்ச்சிகரமாக அமையும் என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

புலர் லௌகீக வாழ்வுக்கு மட்டும் முக்கியம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

அப்படி வாழும் மனிதர்களின் நிலைமைகளை நாம் ஆராய்ந்தால் நிம்மதி அற்றவர்களாக சந்தோஷத்தை அடகு வைத்தவர்களாக மகிழ்ச்சிரமான வாழ்வை இழந்தவர்களாக இருப்பதை அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகள் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம்.

அழிந்து உருக்குலைந்து போகும் உலக வாழ்வை மட்டு மையமாக வைத்து வாழும் மனிதர்களின் நிலை இப்படி அமைந்து விடுகிறது.

ஆத்மீகத்துறைக்கு முன்னுரிமை கொடுத்து தனது முயற்சிகள் அனைத்தையும் ஆத்மீகத் துறைக்குத் திருப்பி விடும் மனிதனின் நிலை உயர்ந்ததாகவும் அவனுடைய வாழ்வு சிறப்புற்றதாகவும் உலகில் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் அடைந்தோனாகவும் பெருமதிமிக்க வாழ்வின் உச்சஸ்தானத்தை எட்டிப் பிடித்தவனாகவும் ஆகி விடுகிறான்... இது அல்லாஹ்வையும் அவனது தூதர் ஹஸரத் ரசூல் (ஸல்) அவர்களின் வழிகளையும் தேர்ந்தெடுத்து வாழும் மனிதனின் நிலை.

ஒரு மனிதனின் முழு மனிதனாக வாழ வேண்டும் என விரும்பினால் அவனுடைய நோக்கம் உலகமாக இருக்கக் கூடாது.

ஹஸரத் ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்வின் அடிப்படையைப் பின்பற்றி வாழக்கூடிய உயர் நோக்கம் கொண்டவனாக இருக்க வேண்டும்.

மனிதன் படைக்கப்பட்ட நோக்கம் நிறைவேற இது ஒரு பிரதான வழியாகவும் அமைந்து விடுகிறது.

இப்பிரதான வழியில் முதலில் தென்படுவது "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்ற அல்லாஹ்வின் வசனம் தான்.

இதைக் கடந்துதான் மற்ற அனைத்திற்கும் செல்ல வேண்டும்.

உலகில் உள்ள ஒரு முஸ்லிம் எந்தக் கருமத்தை ஆற்ற வேண்டி ஏற்பட்டாலும் முதன் முதலாக பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற வசனத்தை கூறியே ஆரம்பித்தாக வேண்டும். இதை விட்டு விட்டால் அத்தனை கருமங்களும் உயிரற்றதாகிப் பாழாகி விடும்.

ஒரு முஸ்லிம் முதன் முதல் பிரவேசிக்கும் வசனம் இந்த வசனமாகவே இருக்கிறது.

ரசூல் (ஸல்) அவர்களின் சொல்லும் செயலும் இதைக் கொண்டுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதுவே அனைத்துக் காரியங்களுக்கும் திறவுகோலாக இருக்கிறது.

இத் திறவுகோலை கொண்டு என்னென்ன பிரயோசனங்களை அடைந்து கொள்ளலாம் என்பதைச் சிறிதளவு சிந்தனைக்கு எடுத்து ஆராய்வோம்.

உலகில் அல்லாஹ்வின் கட்டளைகளையும் ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைகளையும் அனுசரித்து வாழ்ந்த மக்களுக்கு வல்ல அல்லாஹ்வின் அருளால் சொர்க்க வாழ்க்கையைப் பெற்றுக் கொண்ட மக்கள் சொர்க்கத்தில் எப்படி அமல் செய்வார்கள் என்பதையும் வாராந்த அமல்கள் எப்படி இருக்கும் என்பதையும் "கசீனதுல் அஸ்ரார்" என்ற நூலின் வாயிலாக நாம் பார்ப்போம்.

உலகில் இருக்கும் போது "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" அதிகமாக ஓதியவர்கள் திக்ர் செய்த மக்கள் ...டிய அளவு பருகுவார்கள்.

நான்கு நாட்களும் அந்த நான்கு ஆற்றிலிருந்து பருகி முடிந்ததும் ஐந்தாம் நாள் அவர்கள் பறந்து சென்று கஸ்தூரியிலான பிரமாண்டமான மலையை அடைந்து அங்கு "ஸல் சபீல்" என்ற ஒரு ஆறு ஓடிக் கொண்டிருக்கும் புதன் கிழமையான அன்று அதிலிருந்து ஓடும் பானத்தைப் பருகுவார்கள்.

அடுத்து அங்கிருந்து பறந்து சென்று பிரமாண்டமான ஒரு மாளிகையை அடைவார்கள்.

வியாழக்கிழமையான அன்று அந்த மாளிகையில் உயர்தரமான கட்டில்கள் போடப்பட்டிருக்கும். அந்தக் கட்டில்களில் அமர்ந்து கொண்டிருக்கும் போது "ஜன்ஜபீல்" என்ற உயர்தரமான பானம் அவர்களுக்கு குடிக்கக் கொடுக்கப்படும்.

வியாழக்கிழமை முழு நாளும் அங்கு இருப்பார்கள். அவர்களுக்கு வெண்மையான மேகம் போன்ற அருள்மாரி அவர்கள் மீது பொழியப்பட்டு ஆபரணங்களும் மாணிக்கக் கற்களும் அணிவிக்கப்படுவார்கள்.

நாளான வெள்ளிக்கிழமை பின்னர் அங்கிருந்து கடைசியன்று "மக்காதேஸத்க்" என்ற இடத்தை அடைவார்கள்.

அங்கு "மாயிததுல் குல்த்" என்ற உணவுத் தட்டில் எல்லோரும் ஒன்று கூடுவார்கள்.

அங்கு "ரஹீமேமக்தூம்" என்ற கஸ்தூரியினால் முத்திரையிடப்பட்ட தெளிந்த நீரை அவர்கள் பருகுவார்கள்.

நூல் கசீனதுல் அஸ்ரார்

இப்படியான உயர்தரமான சொர்க்கத்தில் அனுபவிக்கக் கௌரவமும் மரியாதைகளும் யாருக்குக் கொடுக்கப்படுகிறது?

எவர் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்ற வசனத்தை எல்லா நல்ல விடயங்களுக்கும் முன்னால் சொல்லி அதையே சகலவற்றுக்கும் முதலாகச் சொல்லி தஸ்பீஹ் செய்து சாலிஹான அமல்களைச் செய்து பாவங்களை முற்றிலும் தவிர்க்கிறாரோ அந்த அன்னவருக்காக சித்தப்படுத்தி வைக்கப்பட்டு உள்ளவைகளே இவைகள் அனைத்தும்.

கியாமத் நாளில் ஹஸரத் ரசூல் (ஸல்) அவர்களின் உம்மத்தினருடைய அமல்கள் நிறுக்கப்படும் பொழுது இவர்களின் தொழுகையின் ஒரு ரக்அத்தின் அமல் மற்ற நபிமார்களின் உம்மத்துக்களுடைய ஆயிரம் ரக்அத் அமல்களின் அளவு கனமுடையதாகவிருக்கும்.

இதனால் அந்த உம்மத்தினர்கள் வியப்பின் எல்லைக்கு சென்ற நேரத்தில் "ஆச்சரியப்படாதீர்கள்... அவர்கள் தங்களுடைய தொழுகையில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்பதை ஓதுபவர்களாக இருந்தார்கள்" எனக் கூறப்படும்.

நூல்— நுஸ்ஹதுல் மஜாலிஸ்

ஹஸரத் ரசூல் (ஸல்) அவர்களின் உம்மத்துகளை எந்த அளவு சிறப்பைக் கொண்டு அதி உயர்ந்த முறையில் கண்ணியப்படுத்திக் கூறியிருப்பதை பார்ப்போம்.

நபி மூசா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கூறினான் நான் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்தினரை மூன்று இஸ்முகளைக் கொண்டு கண்ணியப்படுத்தியுள்ளேன்.

— என அல்லாஹ் அறிவித்த போது மூசா நபி (அலை) அவர்கள் இரட்சகனே அவை எவை என வினவினார்கள்.

அது பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என மறுமொழி கூறினான்.

அப்போது அந்த மஜ்லிசில் இருந்த கண்பார்வை இழந்த ஒருவர் "யாறப்பீ! அந்த இஸ்முகளின் பொருட்டால் எனக்குக் கண்பார்வை அளிப்பாயாக" என்று துஆ கேட்டார்.

உடனே அல்லாஹ் அவருக்குப் பார்வை வழங்கினான்.

நூல் நுஸ்ஹதுல் மாஜாலிஸ்

## ஹழராமஜ்லிஸில் மௌலவி உரை

பேருவளை சீனன்கோட்டை ஜெமமியத்துல் இக்வானுஷ்...

தினபதி

## இஸ்லாமிய ...

—— தயாரிப்பு: எப். எம். பைரூஸ் ——

## ஒற்றுமை வேண்டும்

ஒரு சமுதாயத்தின் உயர்வும் தாழ்வும் அந்தச் சமூகத்தின் ஒற்றுமைக்கு ஏற்பவே அமைகிறது.

எந்தச் சமூகத்தினர் தங்களின் வாழ்க்கையை ஒற்றுமை என்னும் வேலிக்குள் அமைத்துக் கொள்கிறார்களோ, அவர்களின் மத்தியில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், வெள்ளையன், கறுப்பன், முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடின்றி "யாவரும் சமம்" என்ற தன்மை வளரும். அந்த மனப்பாங்குடையவர்களாக வாழ முடியும் என்றால் அது எவராலும் அவ்வாறு கூறுகிறது.

அல்குர்ஆன் கூறும் அதே விடயத்தைத்தான் அல் ஹதீஸும் உரைக்கிறது.

"ஒரு முஸ்லிமுக்கும் மற்றொரு முஸ்லிமுக்கும் உதாரணம் உடம்பைப் போன்றது என அண்ணலார் அவர்கள் நவின்றார்கள்.

உடம்பு என்றால் பல உறுப்புக்கள் அதற்கேற்ற வடிவங்களில் சேர்ந்து அங்கம் வகிப்பதையே குறிப்பிடப்படுகிறது ...னைக்கு உட்படுத்தப்படுகிறது என்பதே கருத்தாகும்.

இதனை மையமாகக் கொண்டே அல்லாஹ் திருமறையில் கயிற்றை ஒப்பிட்டது போன்று நபி மணி (ஸல்) அவர்கள் உடம்பை ஒப்பிட்டு விளக்கி உள்ளார்கள்.

எனவேதான் அல்குர்ஆனும் அல் ஹதீஸும் "இஸ்லாம்" என்னும் வரையறைக்குள் உட்பட்ட அனைவருக்கும் ஒற்றுமை என்னும் கயிறு அவசியம் என்...

## எப்படி பெறுவது?

நான் ஐந்து பொருள்களை ஐந்து பொருள்களுள் வைத்திருக்கிறேன்.

ஆனால் மக்களோ அவற்றை வேறு பொருள்களில் தேடுகிறார்கள்.

(1) நான் எனது திருப்தியை இச்சைகளை அடக்கி வாழ்வதில் வைத்திருக்கிறேன்.

அதை மக்கள் தமது மனம் போனவாறு வாழ்வதில் தேடுகிறார்கள்.

(2) நான் இன்பத்தைச் சுவர்க்கத்தில் வைத்திருக்கிறேன்.

மக்கள் அதை இம்மையில் தேடுகிறார்கள்.

(3) நான் கல்வி அறிவையும் கலைகளையும் பசித்த வயிற்றில் வைத்திருக்கிறேன்.

மக்கள் அவற்றை நிறைவயிற்றில் தேடுகிறார்கள்.

(4) நான் போதும் என்ற மனத்தில் செல்வத்தை வைத்திருக்கிறேன்.

மக்கள் அதைப் பொருளில் தேடுகிறார்கள்.

(5) நான் கண்ணியத்தையும் மரியாதையையும் என் ஆணைகளை ஏற்று நடப்பதில் வைத்திருக்கிறேன்.

ஆனால் மக்களோ அவற்றை அரச அரண்மனைகளின் தலைவாயிலில் தேடுகிறார்கள்.

அவர்கள் அவற்றை எப்படி பெற முடியும்?

அல்லாஹ் தன் இறுதித் தூதராகிய முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு அறிவித்தான்:

— றமஸியா ஹமஸா

## மிஃறாஜ் விழா

கொழும்பு பெப் 28

கொழும்பு மருதானை மொஹிதீன் மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள இஸ்லாமிய சமூகப் பணிகள் நிலையம் நாளை சனிக்கிழமை மாலை ...

## அரபு கல்லூரியில் மாணவிகள் சங்கம் அமைவுறும்

கல்எளிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியில் பழைய மாணவியர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

கல்லூரி அதிபர் மௌலவியா ஜெலீலா சபீக் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

## ஹிழ்ராம் மஜ்லிஸில்

## மௌலவி உரை

பேருவளை சீனன்கோட்டை ஜெம்மியத்துல் இக்வானுஷ் ஷாதுலியீன் வாலிபர் ஹழறா ஜெமாஅத் இயக்கங்களின் ஹழறா மஜ்லிஸ் இன்று 2ஆம் சிஷுதி மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து சீனன்கோட்டை எகொடவத்தை ஸாவியாவில் நடைபெறும்

மாபோலை ஜும்மஆப் பள்ளி வாசல் கதீப் கலீபதுர் ரிபாயி மௌலவி ஏ சி அஹமது பளீல் (காஸிமி) சிறப்புரை நிகழ்த்துவார்—

...போம—

உலகில் இருக்கும் போது "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் அதிகமாக ஓதியவர்கள் திக்ர் செய்த மக்கள் சனிக்கிழமையன்று சொர்க்கத்தின் நீராற்றில் இருந்து நீர் பருகுவார்கள்—

அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமை தேனாற்றிலிருந்து தேன் பானத்தைப் பருவார்கள்—

மறுநாள் திங்கட்கிழமை பாலாற்றிலிருந்து பாலைப் பருகிக் கொண்டிருப்பார்கள்—

செவ்வாய்க்கிழமை ஆற்றிலிருந்து தனக்கு வேண்

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1410 ஷர்பான் பிறை 4

## முஸ்லிம் கல்வி வளர்ச்சி

கொழும்பு மாவட்டத்தில் இருந்து கடந்த கால் நூற்றாண்டுகளாக முப்பது முஸ்லிம் மாணவர்களையாவது பல்கலைக் கழகங்களுக்கு அனுப்ப முடியவில்லை.

கொழும்பு மாவட்டத்தில் 22 முஸ்லிம் பாடசாலைகள் இருந்தும் நிலைமை இப்படி உள்ளது.

இது ஒரு பாரதூரமான விடயம் என்று பாமிஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம் எம் ஸுஹைர் கூறி இருக்கிறார்

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி எந்த அளவில் இருக்கிறது என்பதை இது ஓரளவில் எடுத்துக் காட்டுகிறது.

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு ஒரு தரமான பாடசாலையை பாமிஸ் அமைக்கும் என்றும்,

இது இலாப நோக்கில் அன்றிச் சேவை அடிப்படையில் நடத்தப்படும் என்றும் அவர் கூறி இருக்கிறார்.

இந்தப் பாடசாலையை நாம் எமது சொந்த நிதியைக் கொண்டு அமைப்போம்

இதற்கான நிதி வளமும் எம்மிடம் உண்டு.

எமக்கு இப்பாடசாலையை அமைக்க காணி தான் வேண்டும் என்றும் ஜனாப் ஸுஹைர் தெரிவித்திருக்கிறார்.

காணித் தேவைப் பற்றி பிரதமரிடமும் ஜனாப் ஸுஹைர் பாமிஸ் வருடாந்த மாநாட்டில் பிரஸ்தாபித்தார்

முஸ்லிம்களுள் காணி வசதி படைத்தவர்கள் பலர் இருக்கின்றார்கள் அவர்கள் மனம் வைத்தால் விஷயம் நொடிப் பொழுதில் நடந்து விடும்.

வெள்ளையன், கறுப்பன், முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடின்றி "யாவரும் சமம்" என்ற தன்மை வளரும். அந்த மனப்பாங்குடையவர்களாக வாழ முடியும் என்றால் அது எவராலும் மறுக்கப்படாத உண்மையாகும்—

இவ்வாறான தன்மை ஏற்படுமானால் இன்று எமது மத்தியில் ஒற்றுமை இன்மையால் ஏற்பட்டிருக்கும் பல விதமான பூசல்களை நாம் அதிகாரிகள் போட்டுத் தேடினாலும் கண்டு கொள்ள முடியாத நிலையையே நிச்சயமாக ஏற்படும்—

அவ்வாறான ஒரு நிலையை உருவாக்குவதில் ஒத்துழைக்க நாம் முதலில் நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும்—

சமூகத்தில் ஒரு சகோதரருக்குத் துன்பம் ஏற்படும் போது அது ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டதாகக் கருத வேண்டும்

இதைத்தான் அல்லாஹுத்தஆலா திருமறையின் மூலம் முஸ்லிம் சமூகத்தினருக்கு "நீங்கள் அல்லாஹுத்தஆலாவின் ஒற்றுமை என்னும் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்" வழி தவறி விடாதீர்கள்" என்று ஆணையிடுகிறான் (2–107)

இங்கு அல்லாஹுத்தஆலா நாம் அனைவரும் விளங்கக் கூடிய வகையில் கயிற்றை உவமையாகக் கூறியுள்ளான்—

முஸ்லிம்கள் ஒன்றிணைந்து எல்லோரும் சமன் என்ற எண்ணக் கருவுடன் ஐக்கியப்பட்டால் எவராலும் எச்சக்தியாலும் அவர்களைத் தாழ்த்தவோ, தாக்கவோ முடியாது—

எப்போது முஸ்லிம்கள் ஒற்றுமை என்னும் கோட்பாட்டை விட்டு விலகி சமூகம் என்ற சிந்தனை அற்றவர்களாக தனக்கும், குடும்பத்துக்கும் சொத்துக்காக வாழ முயல்கின்றனரோ அப்பொழுதே அவர்களின் நிலையை அந்நியவர்களிடம் கயிற்றை விட்டுத் தனித்த துரும்பைப் போன்றதான் அமையும—

இதற்காகத்தான் அல்குர்ஆன்

றார்கள்—

உடம்பு என்றால் பல உறுப்புக்கள் அதற்கேற்ற வடிவங்களில் சேர்ந்து அங்கம் வகிப்பதையே குறிப்பிடப்படுகிறது—

எனவேதான் அல்குர்ஆனும் அல் ஹதீஸும் "இஸ்லாம்" என்னும் வரையறைக்குள் உட்பட்ட அனைவருக்கும் ஒற்றுமை என்னும் கயிறு அவசியம் என்

### — புஹாரி அப்துல் றவூப் —

மனிதனுடைய உடம்பை நாம் கருதும் போது அதனை மூன்று பாகங்களாகப் பிரித்து வேறு காணலாம்—

தலைப்பாகம், அல்லது மேல் பாகம், நடுப்பாகம், கீழ்ப்பாகம் என்பதே அவை—

உடம்பை எத்தனை பாகங்களாகக் கூறு போட்டு பிரித்துப் பார்த்தாலும் கூட எந்தப் பாகத்திலேனும் சிறு வலி ஏதும் ஏற்படுமானால் அதன் பிரதிபலன் எல்லாப்பாகங்களிலும் தென்படும்—

வலி ஏற்பட்ட பகுதி மட்டும் இம்சிக்கப்படுவதில்லை—

முழு உடம்புமே அந்த வேதனையை பல ஒப்புவமைகள் மூலமும் படிப்பினைக்குரிய சரித்திரங்கள் மூலமும் வலுக்கட்டாயமாக எமக்கு உணர்த்தி உள்ளன—

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஒற்றுமைக் கொடியைக் கைகளில் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளார்கள்—

எனவே நாம் ஒற்றுமைக்கு வரைவிலக்கணம் முஸ்லிம்களால் வழங்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் செயல்பட முயற்சிப்போமாக!

ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!

## மனித தோற்றம் பற்றிய குர்ஆன் மொழிகள்

நிச்சயமாக நாம் மனிதனை முதலில் சக்தி உள்ள களிமண்ணால் படைத்தோம்.

பின்னர் நாம் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரிய துளியாகச் செய்தோம்.

பின்னர் நாம் இந்திரியத் துளியை ஓர் இரத்தக் கட்டியாக ஆக்கினோம்.

பின்னர் நாம் அந்த இரத்தக் கட்டியை ஒரு சதைத் துண்டாகச் செய்தோம்.

அதன் பின் நாம் அந்த சதைத் துண்டில் எலும்புகளை சதையால் மூடினோம்.

அதன் பின் நாம் அதை மற்றொரு படைப்பாக அமைத்தோம்

எனவே, படைப்பவர்களில் மிகச் சிறந்தவனான அல்லாஹ் தூய்மையானவன்.

(23: 12–14)

மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனைப் பயந்து கொள்ளுங்கள்.

அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்.

அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான்.

பின்பு அவ்விருவரிலிருந்து அநேக ஆண், பெண்களைப் படைத்தான்.

(4: 1)

உயிருள்ள அத்தனையையும் நாம் நீரிலிருந்தே படைத்தோம்.

(21: 30)

எம் சீ துவான் மொஹிதீன்

கொழும்பு ... 28

கொழும்பு மருதானை மொஹிதீன் மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள இஸ்லாமிய சமூகப் பணிகள் நிலையம் நாளை சனிக்கிழமை மாலை மிஃறாஜ் பரிசளிப்பு விழாவை நடத்தும்—

சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்—

சன்மார்க்கப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அவர் பரிசில்களையும் வழங்குவார்— பல அறிஞர்கள் உரையாற்றுவர்—

மாணவியர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படும்—

கல்லூரி அதிபர் மௌலவியா ஜெலீலா சபீக் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்—

இதன்படி இக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி பயின்று வெளியேறிய சகல மாணவியரும் தமது சொந்த முகவரிகளை மார்ச் 21ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்—

கல்லூரியின் பழைய மாணவியர் சங்க அமைப்புக் குழு இவ்வாறு கேட்டுள்ளது—

● இன்று

## மருதமுனையில் இஸ்லாமிய நூல் வெளியீட்டு விழா

இஸ்லாமிய எழுத்தாளர் ஜனாப் காத்தநகர் புஹாரி எம் இப்றாஹீம் எழுதிய மௌலானா மௌதூதி (றஹ்) மௌலானா இல்யாஸ் (றஹ்) இவர்கள் யார்? என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று நடைபெறும்—

ஏற்கனவே வெளியான ஜனாப் புஹாரியின் "தாடி முஸ்லிம்களுக்கு அவசியமா?", "நோய் தீர்க்கும் மாமருந்து பிஸ்மில்லாஹ்!", "உம்றா செய்வது எப்படி?". "பெண்களுக்கு பர்தா அவசியமா?" "ஹமவோஸ்த் அது ஒரு வேஸ்ட்" ஆகிய ஐந்து நூல்களின் அறிமுக விழாவும் இன்று நடைபெறும்—

மருதமுனை அல்மனார் வித்தியாலய அரபுப் பிரிவில் உப அதிபர் ஜனாப் என் எம் மூஸா தலைமையில் நடைபெறும் இவ்விழாவை மருதமுனை சமூக சேவை ... ஏற்பாடு செய்து உள்ளனர்—

மசூர்க் கொத்தன் (அதிபர்) விமர்சன உரை நிகழ்த்துவார்

ஜனாப் எஸ் எம் ... (அதிபர்) வரவேற்புரை நிகழ்த்துவார்—

ஏ எம் ஹசன் (சர்க்கி) அறிமுகம் செய்வார்—

சிறப்புப் பேச்சாளர்களாக மௌலவி ஏ எல் முஹம்மது அஷ்ரப். கிழக்குப் பல்கலைக் கழக அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை பீடாதிபதி எம் ஐ அப்துர்ரசாக், சட்டத்தரணி ஜனாப் எஸ் முத்துமீரான் ஆகியோர் கலந்து கொள்வர்—

கௌரவ அதிதிகளாக ஜனாப் எஸ் ஏ என் இஸ்மாயீல் மௌலானா (அதிபர்) அல்ஹாஜ் எம் என் ஐயப் ஆகியோரும் கலந்து கொள்வர்—

ஜனாப் எம் எஸ் எம் ஜலால்தீன் மௌலவி என் இஸ்... (சர்க்கி). மௌலவி ஏ ஏ எம் ... (பாரிஸி. ஜமாலி), மௌலவி ஒ எல் எம் இல்யாஸ் (சர்க்கி).

மௌலவி எம் ... மௌலானா (சர்க்கி) ஜனாப் ... (அதிபர்) ஆகியோர் உரையாற்றுவர்—

... வாழ்த்துப்பாவை நூலாசிரியரை மௌலவி எம் யும் பாடுவர்—

தொழிலின்றி அல்லலுறும்

# தேசிய மட்ட வீரர்கள்: வேலை வாய்ப்பு

## அமைச்சர் மத்தியூவின் கோரிக்கை பிரதமரால் ஏற்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 1

தொழில் வாய்ப்பின்றி வீட்டிலிருக்கும் தேசிய மட்ட விளையாட்டு வீரர்களுக்கு தொழில் வழங்கப்படும்— விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் நந்தா மத்தியூ பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்ற உறுதிமொழியை பிரதமர் வழங்கினார்—

கடந்த ஆண்டு இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களைப் பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் அலரி மாளிகையில் நடைபெற்றது—

அப்போது அங்கு உரையாற்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ தேசிய மட்ட வீரர்கள் தொழில் கிடைக்காமல் வீடுகளில் இருப்பதாகவும் அவர்களுக்கு தொழில் பெற்றுத் தர ஆவன செய்யப்பட வேண்டுமென்றும் பிரதமரிடம் வேண்டிக் கொண்டார்—

இதற்குப் பதிலளித்த பிரதமர் டி. பி விஜேதுங்க, வேலை வாய்ப்பின்றி இருக்கும் இவர்களில் ஒரு பகுதியினர் அரச வங்கிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று உறுதியளித்தார்— மேலும் ஒரு பகுதியினரை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் சேர்த்துக் கொள்ளும்படி தேசிய ஒலிம்பிக் கமிட்டி செயலாளர் பிரேமா பின்னவலையிடம் பிரதமர் கேட்டுக் கொண்டார்—

தொழில் வாய்ப்பின்றி இருக்கும் விளையாட்டு வீரர்களுக்கு விரைவிலேயே தொழில் வழங்கப்படும் என்றும் பிரதமர் தனது உரையின் போது உறுதியளித்தார்— மேலும் எதிர்வரும் ஆண்டு கொழும்பில் நடைபெறவிருக்கும் தெற்காசிய விளையாட்டுப் போட்டி வெற்றிகரமாக நடைபெற தன்னாலான எல்லா உதவிகளையும் செய்யத் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்—

இவ் வைபவத்தின் போது பதக்கம் பெற்ற தெற்காசிய விளையாட்டு வீரர்களுக்கு பணப் பரிசு வழங்கப்பட்டது— இதற்கான காசோலைகளை பிரதமர் வீரர்களிடம் கையளித்தார்—

விருது பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளில் தங்கப் பதக்கம் பெற்ற ஜூலியன் பொலிங், விஜித அமரசேகர மற்றும் வி கே எல் சமரசிங்க ஆகியோரும் வைபவத்தில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்— இதற்கான நிதியை தேசிய விளையாட்டுத் துறை நிதியம் அளித்திருந்தது—

இங்கு உரையாற்றிய விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ தெரிவித்ததாவது—

கிராம மட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ஆர் பிரேமதாச பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளார்— ஆகவே. விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்—

சில தேசிய விளையாட்டுச் சம்மேளனங்கள் இவ் ஆண்டுக்கான விளையாட்டு நடவடிக்கைகளை இன்னும் ஆரம்பிக்கவில்லை— அவை உடனடியாக தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்— இல்லாவிட்டால் இச் சம்மேளனங்கள் பேரில் அமைச்சு உறுதியான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கும்—

இப்படி இங்கு தெரிவித்த அமைச்சர் ஐந்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஆண்டு கொழும்பில் நடத்தப்படவிருப்பதைக் குறிப்பிட்டதோடு போட்டி ஏற்பாடுகளுக்கு பெருமளவு நிதி தேவைப்படும் என்பதை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்—

[எ—032]

## கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றி

மடவளை, பெப் 28

பொல்கொல்லை கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் உடதலவின்ன ஜாமியுல் அஸ்ஹர் வித்தியாலயம் வெற்றி பெற்றது—

அண்மையில் பொல்கொல்ல மகாவலி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் ஜாமியுல் அஸ்ஹர் வித்தியாலயம் மடவளை மதீனா மத்திய கல்லூரி கோஷ்டியை 2—1 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது—

[எ—431]

## விளையாட்டு பகுதி

## நியூஸிலாந்து போட்டிக்கு வருமாறு அரவிந்தவுக்கு அழைப்பு

கொழும்பு மார்ச் 1

இலங்கையின் பிரபல கிரிக்கெட் துடுப்பு ஆட்ட வீரரான அரவிந்த டி சில்வா நியூஸிலாந்து உலக புகழ் வாய்ந்த வேகப் பந்து வீச்சாளரான ரிச்சட் ஹட்லியின் சிறப்பு கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளார்—

இப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி நியூஸிலாந்தில் நடைபெற உள்ளது—

இவ்வழைப்பை நியூஸிலாந்து கிரிக்கெட் சபை விடுத்துள்ளது— அண்மையில் ஆஸ்திரேலியா சென்ற இலங்கை அணியில் அரவிந்த டி சில்வா தன்னுடைய முழுத் திறமையையும் காட்டியிருந்தார்— இவர் சராசரியாக 100 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது—

உலகில் புகழ்மிக்க பல கிரிக்கெட் வீரர்களும் இப்போட்டியில் கலந்து கொள்வார்கள்—

சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ரிச்சட் ஹட்லி ஓய்வு பெறலாம் என்றும் அறியப்படுகின்றது—

(எ—455)

## முஸ்லிம் வித்தியாலய விளை. போட்டி

உடத்தலவின்ன, பெப்— 28

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இனிகலை முஸ்லிம் வித்தியால இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் நீல இல்லம் முதலிடம் பெற்றது—

202 புள்ளிகளைப் பெற்ற மேற்படி இல்லம் உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ ஸீ எஸ் ஹமீத் வழங்கிய சுற்றுக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது—

201 புள்ளிகளைப் பெற்ற சிவப்பு இல்லம் இரண்டாமிடத்தையும் — 197 புள்ளிகளைப் பெற்ற பச்சை இல்லம் மூன்றாம் இடத்தையும் அடைந்தன—

(எ—334)

மன்விலயில்

## அதிகாரி ஒருவர் சுட்டுக் கொலை:

கொழும்பு, மார்ச் 1

பன்வில தேயிலைத் தொழிற்சாலையின் வேலைத் திட்ட அதிகாரி திரு எஸ் ரி செனிவிரட்ன அவருடைய வீட்டில் வைத்து அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார்—

இனந்தெரியாத 2 நபர்கள் இந்தக் கொலையை செய்துள்ளனர்—

அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது— அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள மேலும் பல சம்பவங்கள் வருமாறு—

ஓனுகெட்டியா — மெனிக்கின்ன — உரபொல — ஹரஸ்வேதா ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதலின் போது மறைவிடம் ஒன்றில் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கிறனேட்டுகள், துப்பாக்கிகள் — பொலீஸ் — இராணுவ சீருடைகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன—

மதவாச்சி — கட்டியாவ — பலுகஸ்வேவ ஆகிய இடங்களில் 12 நாசகாரர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்—

இவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் — தோட்டாக்கள் — ரோணியோ இயந்திரம் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன—

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது— (இ—கு)

## ஸாதாத் முஸ்லிம் வித்தியாலய விளை. போட்டி

கொடப்பிட்டிய ஸாதாத் முஸ்லிம் மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அண்மையில் ஸாதாத் மகா வித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெற்றது—

இவ்வருட விளையாட்டுப் போட்டியில் சபா இல்லம் 333 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது—

(எ—430)

## தூர இடங்களிலுள்ள கடைகள் இரவு 10 மணிவரை திறந்து வைப்பதில் பயனில்லை

### ஐக்கிய நகரசபை சம்மேளனம்

கொழும்பு மார்ச் 1

இரவு 8 மணிக்குப் பின் நகரிலிருந்து தூர இடங்களுக்கான பொதுப் போக்குவரத்து வசதிகள் முழுமையாகப் பாதிக்கப்படுகின்றன—

ஆகவே தூர இடங்களில் உள்ள கடைகளை இரவு 10 மணி வரை திறந்து வைப்பதால் எவ்விதமான பயனும் இல்லை—

ஐக்கிய நகர சபை சம்மேளனம் பிரதமர் திரு டீ பீ விஜேதுங்காவிடம் இவ்வாறு தெரிவித்துள்ளது—

சங்கத் தலைவர் திரு பியதாச ஹெய்யன்துடுவ இது தொடர்பாக பிரதமருக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்திருக்கிறார்—

அவர் அக் கடிதத்தில் தொடர்ந்து குறிப்பிட்டு இருப்பதாவது—

கடைகளைத் திறந்து வைக்கும் புதிய சட்டத்தின் மூலம் கொழும்பு நகரில் வாகனப் போக்குவரத்து நெருக்கடி நீங்கியுள்ளது—

ஆனால் தூர இடங்களில் உள்ள கடைகளின் சொந்தக்காரர்களுக்கு இதனால் அசௌகரியம் ஏற்பட்டு உள்ளது—

இலங்கையில் நகர சபைகளின் தலைவர்களின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி நீண்ட நேரம் ஆராயப்பட்டது—

புதிய நேரங்கள் மாநகர சபை பகுதிகளில் மட்டும் நடைமுறையில் இருப்பது சிறந்ததென்றும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது—

இவ்வாறு தலைவர் திரு பியதாச ஹெய்யன்துடுவ தெரிவித்தார்—

(இ—007)







பொன் சுந்தரலிங்கம்
6-45 திருப் பாடல் பயிற்சி
என் நவரட்ணம்
7-00 களத்துமேடு கேள்வி
பதில்

7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 புல்லாங்குழல் — நிலா குஞ்சுமணி

9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 நாடகம் — "

தையும் - 197 புள்ளிகளைப் பெற்ற பச்சை இல்லம் மூன்றாம் இடத்தையும் அடைந்தன- (எ—334)

சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ரிச்சட் ஹட்லி ஓய்வு பெறலாம் என்றும் அறியப்படுகின்றது- (எ—455)

றையும் அனுப்பி வைத்திருக்கிறார்-

அவர் அக் கடிதத்தில் தொடர்ந்து குறிப்பிட்டு இருப்பதாவது—

தீர்மானிக்கப்பட்டது-

இவ்வாறு தலைவர் திரு பிரதாச ஹெய்யன்துடுவ தெரிவித்தார்- (ஏ—007)

# விமான சேவைகள்

## மார்ச் 2 (வெள்ளிக்கிழமை)

### வந்து சேரும் நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0500 | தஹ்ரான் | யூ | எல் | 262 |
| 0520 | பஹறேன் | ஜ் | எப் | 142 |
| 0530 | குவைத் | கே | யூ | 361 |
| 0620 | லண்டன், துபாய் | யூ | எல் | 504 |
| 0745 | ஜெத்தா, றியாத | எஸ் | வி | 340 |
| 1225 | பாங்கொக் | ரி | ஜீ | 307 |
| 2000 | சிங்கப்பூர் | யூ | எல் | 303 |
| 2100 | மாலைத்வு | யூ | எல் | 102 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |
| | அபுதாபி | யூ | எல் | 564 |
| 0740 | பிராங்பேபார்ட் சூரிச் துபாய் | யூ | எல் | 548 |
| 0800 | சிப்போல் தஹ்ரான் கராச்சி | கே | எல் | 801 |
| 1105 | திருச்சி | யூ | எல் | 132 |
| 1140 | சென்னை | ஐ | சி | 573 |
| 1145 | மாலைதீவு | ஈ | கே | 803 |
| 1300 | மாலைதீவு | யூ | எல் | 102 |
| 1545 | திருவனந்தபுரம | யூ | எல் | 162 |
| 1755 | பம்பாய் | ஐ | சி | 586 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |
| 2245 | சென்னை | யூ | எல் | 122 |
| 2330 | சிங்கப்பூர் | யூ | எல் | 303 |
| 2350 | ஹொங்கொங பாங்கொக் | | | |

### புறப்படும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0115 | அபுதாபி, பாரிஸ் சிப்போல் | யூ | எல் | 663 |
| 0130 | துபாய், சோபியா | எல் | இசட் | 582 |
| 0230 | துபாய் சூரிச், பிராங்பேபார்ட் | யூ | எல் | 141 |
| 0635 | பஹ்றேன் | யூ | எல் | 547 |
| 0720 | குவைத் | கே | யூ | 361 |
| 0915 | ரியாத் | எஸ் | வி | 341 |
| 0930 | சிங்கப்பூர் | யூ | எல் | 302 |
| 1325 | பாங்கொக் | டி | ஜீ | 307 |
| 1730 | மாலைதீவு | யூ | எல் | 101 |
| 2330 | துபாய், லண்டன் | யூ | எல் | 503 |
| 2350 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |
| 0520 | மஸ்கட் | ஜீ | எப் | 3144 |
| 0800 | மாலைதீவு | ஈ | கே | 802 |
| 0815 | திருவனந்தபுரம | யூ | எல் | 131 |
| 0845 | பாங்கொக் ஹொங்கொங | யூ | எல் | 422 |
| 0900 | மாலைதீவு | யூ | எல் | 101 |
| 0930 | சிங்கப்பூர் | யூ | எல் | 302 |
| 1235 | பம்பாய் | ஐ | சி | 573 |
| 1245 | துபாய் | | கே | 803 |
| 1300 | திருவனந்தபுரம | யூ | எல் | 161 |
| 1730 | பஹ்றேன் | யூ | எல் | 201 |
| 1840 | சென்னை | ஐ | சி | 586 |
| 1915 | சென்னை | யூ | எல் | 121 |
| 1940 | கராச்சி தஹ்ரான் சிப்போல் | ஈ | கே | 802 |
| 2350 | சிங்கப்பூர் | எஸ் | கியூ | 402 |

## மார்ச் 3 (சனிக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0405 | மஸ்கட் | ஜீ | எப் | 3144 |
| 0700 | துபாய் | ஈ | கே | 802 |
| 0715 | சிப்போல் பாரிஸ் | | | |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் டி ஜீ — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

# வானொலி

## 2—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி

5-05 திருமுறைப் பாடல்கள், கலாராணி பரசாமி

5-30 பாமாலை திருத்தாண்டகம துன லக்ஷ்மி கணநாதலிங்கம

5-45 சைவநற்சிந்தனை

5-50 இஸ்லாமிய நற்சிந்தனை, வழங்குபவர் மௌலவி எம ஐ அப்துர் ரஸாக்

5-55 போதிராதவனின் போதனைகள

6-00 வர்த்தக சேவை

6-30 செய்திகள்

6-40 செய்தித்தான் கண்ணோட்டம அறிவிப்புகள்,

7-00 வர்த்தக சேவை

7-30 பாடசாலைக் கூட்டு நிகழ்ச்சி

7-45 மாகாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 வாத்திய விருந்து

8-15 மெல்லிசைப் பாடல்கள்

8-30 உருது மஞ்சரி - நடத்துபவர்- மௌலானா முஹம மத் ஷஹீதுல்லாஹ் தௌஸர்

9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம

10-30 பக்தி மஞ்சரி

11-00 நாதஸ்வரம நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன்

12-00 வர்த்தக சேவை

12-45 செய்திகள்

12-55 அறிவிப்புகள்

1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்

6-10 அறிவிப்புகள்

6-15 திருவாசகம

பொன் சுந்தரலிங்கம

6-45 கதிப் பாடல் பயிற்சி என் நவரட்ணம

7-00 களத்துமேடு கேள்வி பதில்

7-15 விவசாய நாடகம வயலோடு வசந்தங்கள்,

7-30 மெல்லிசைப் பாடல்கள்,

7-50 உலகச் செய்திகள்

இரவு

8-00 தர்ஜமதுல் குர்ஆன்

8-05 சமூகச்சித்திரம "ஊடுருவல்" பிரதி- எஸ் ஐ எம ஏ ஜப்பார்

8-15 கவிதைச்சரம தொகுப்பு பாவலர் பஸீல் காரியப்பர்

8-30 பாணகமுவ முஹியித்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்ற குத்பா பிரசங்கத்தின் தொகுப்பு

8-50 கிறாஅத்

8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்

9-30 செந்தமிழ் வார்த்த செம்மல்கள் மல்லாகம விஸ்வநாதன் கு சி குலரத்தினம

9-45 கதாப்பிரசங்கம நிகழ்த்துபவர் எஸ் வடிவேலு

10-30 நினைவில் நிறைந்தவை

11-00 ஒலிபரப்பு முடிவு

## 3—3—1990

காலை —

5-00 நாதாஞ்சலி

5-05 தோத்திரமாலை — வெங்கடேஸ்வர சுப்ர பாதம

5-30 பாமாலை — நவக்கிரக ஸ்தோத்திரம

5-45 சைவ நற்சிந்தனை

5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை

5-55 பக்திப் பாடல்

6-00 வர்த்தக சேவை

6-30 செய்திகள்

6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்

7-00 வர்த்தக சேவை

7-45 மாகாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 புல்லாங்குழல் — நிலா குஞ்சுமணி

8-15 தமிழ் மூலம சிங்களம — என் டீ பீரிஸ்

8-30 மாணவர் மன்றம — தொகுத்த நடத்துபவர் எம எச் பௌசுல் அமீர்

9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 கல்வியரங்கம

10-30 அறிவுச்சுடர் — நடத்துபவர் கே எஸ் பாலச்சந்திரன்

11-00 இசையமுதம

11-30 ஓடி விளையாடு பாப்பா நடத்துபவர் ரேலங்கி செல்வராஜா

11-45 அரங்கேற்றம

12-00 வர்த்தக சேவை

12-45 செய்திகள்

12-55 அறிவிப்புகள்

1-00 வர்த்தகசேவை

மாலை —

6-00 செய்திகள்

6-10 அறிவிப்புகள்

6-15 ஞானக்கோவை

6-30 இசைப்பயிற்சி — ஏ எஸ் நாராயணன்

6-45 நாட்டுப் பாடல்கள் — எஸ் விவேகானந்தன்

7-00 குன்றின் குரல் - தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்

7-30 சர்வோதயம

7-50 உலகச் செய்திகள்

இரவு —

8-00 தர்ஜமதுல் குர்ஆன்

8-05 "நேயர் குரல்" நேயர்களின் கடிதங்களுக்கு முஸ்லிம சேவைக் கட்டுப்பாட்டாளர் பதிலளிக்கக் கேட்கலாம

8-15 திருக்குர்ஆன் ஆய்வுரை நிகழ்த்துபவர் அல்ஹாஜ் எம எம அப்துல் காதர்

8-25 முஸ்லிம செய்திகள்

8-30 இளைஞர் இதயம நடத்துபவர் செய்யது ஏ மௌலானா

8-50 இஸ்லாமிய கீதம

8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும

9-00 செய்திகள்

9-10 அறிவிப்புகள்

9-20 பக்திப் பாடல்கள்

9-30 நாடகம - "கர்வமும வாழ்வும" எழுதியவர், அராலியூர் ந சுந்தரம பிள்ளை

10-00 இசைக் கச்சேரி — ஏ எஸ் நாராயணன்

10-45 நினைவில் நிறைந்தவை

11-00 ஒலிபரப்பு முடிவு

# ரெலிவிஷன்

## 2—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி

5-00 செய்திகள் - சிங்களம

5-30 "சந்தரங்க மண்டல"

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி

6-15 கார்ட்டூன் படம

6-30 செய்திகள் - தமிழ்

6-55 "ஒளி ஒலி"

7-25 விவரணச் சித்திரம

8-00 செய்திகள் - சிங்களம

8-30 "இசுரு சொயா" — நாடகம

9-00 "லொட்டோ ட்ரோ"

9-30 செய்திகள் - ஆங்கிலம

10-00 சிங்களத் திரைப்படம

11-45 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என.

6-00 முமமணிகளுக்கு அஞ்சலி

6-15 மெடிசினல் டிரக்ஸ்

6-30 செய்திகள் - சிங்களம

7-00 கீத்தாஞ்சலி

7-30 மியூசிக்கல் ஷோகேஸ்

8-00 வொண்டர் ஸ்ட்ரக்

8-30 மெயின் சான்ஸ்

9-30 "எ பெர்பெ... ஸ்டை"

10-00 செய்திகள் ஆங்கிலம

10-26 "எ பேர்பெக்ட் ஸ்பை"

10-45 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

தோட்ட தொழிலாளர்

# நாட்சம்பளத்தை 10 ரூபாவினால் அதிகரிக்குக

## அஸீஸ் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 1

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சமபளம் பத்து ரூபாவால் அதிகரிக்கப் பட வேண்டும, என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அப்துல் அஸீஸ் கோரிக்கை விடுத்திருக்கிறார்,


தேயிலை உற்பத்தியாளர் மற்றும றப்பர் உற்பத்தியாளரின் சமபள சபைகளுக்கு அவர் இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரை அனுப்பி இருக்கிறார்,

தனியார்துறை ஊழியர்களுக்கு ரூபா 200 சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது, இதே சமபள உயர்வு தேயிலை, றப்பர், தோட்ட தொழிலாளர்களுக்கும வழங்கப்பட வேண்டும என்று அவர் அந்த மகஜரில் குறிப்பிட்டிருக்கிறார்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியாக 20 நாட்கள் வேலையே வழங்கப் படுகின்றது,

இந்த அடிப்படையில் நாளொன்றுக்கு பத்து ரூபா சமபள உயர்வு வழங்குவதே நியாயமானது என்றும அவர், சுட்டிக் காட்டியிருக்கிறார்,

(ல-415)



## கருணாநிதி — ஈ.பி.ஆர் எல்.எப். உறுப்பினர்கள் சந்திப்பு

வடக்கு, கிழக்கு மாகாண சபை கைத்தொழில் அமைச்சர் ஜனாப் அபூயூசுப் சபாநாயகர் திரு பொன் ராம ராஜகாரியர் மற்றும் உறுப்பினர்கள் திரு வி ஏ கந்தசாமி, திருமதி ஜி சிறிதரன், ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தைச் சேர்ந்த திரு கே சாந்தன் ஆகியோர் தமிழக முதல்வர் திரு மு கருணாநிதியை சென்னையில் அவரின் செயலகத்தில் திங்களன்று சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம, முரசொலிமாறனும் படத்தில் காணப் படுகின்றார்,

(ல)

## இலவச மருத்துவ முகாம் 4இல்

கொழும்பு, மார்ச் 1

மல்வானை அஹதியா இயக்கம அல்முபாரக் மத்திய கல்லூரியுடன் இணைந்து ஒருநாள் இலவச மருத்துவ முகாம ஒன்றை நடத்தவுள்ளது,

எதிர்வரும 4ஆம திகதி காலை 7 மணியில் இருந்து மாலை 5 மணி வரை, இந்த மருத்துவ முகாம நடைபெறும,

பியகம உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மக்களின் சுகாதார குறைபாடுகளைப் போக்க இந்த இலவச மருத்துவ முகாம வழிவகுக்கும,

கண் வைத்திய நிபுணர்கள் உட்பட மொத்தம 30 டாக்டர்கள் இமமுகாமில் கலந்து கொள்கிறார்கள்,

தடுத்து வைக்கப்பட்டிருந்த

## 288 மாணவர்கள் இதுவரை விடுதலை

கொழும்பு, மார்ச் 1

இளைஞர் மறுவாழ்வு நிலையங்களில் தடுத்த வைக்கப்பட்டிருக்கும மாணவர்களில் 288 பேர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்—

பிரஸ்தாப மாணவர்கள் மறுவாழ்வு நிலையங்களில் வைத்தே அவர்களது பெற்றோரிடம ஒப்படைக்கப்பட்டனர்—

மேற்படி மறுவாழ்வு நிலையங்களில் தடுத்த வைக்கப்பட்டுள்ள மாணவர்களில் எஞ்சியோர் இன்னும ஒரு வாரத்தில் விடுதலை செய்யப்படுவர்—

மறுவாழ்வு ஆணையாளர், ஜெனரல் கோர்னல் ஆனந்த வீரசேகர இத்தகவலைத் தெரிவித்தார்—

மறுவாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரும விடுதலை செய்யப்பட்ட பின்னர் திருமணமானவர்களை விடுதலை செய்வது குறித்து தீர்மானிக்கப் படும என்றும கோர்னல் ஆனந்த வீரசேகர தெரிவித்தார்—

திருமணமானவர்களை விடுதலை செய்வதற்கு முன்னர் அவர்களைப் பற்றி விரிவாக ஆராயப் படும என்றும கூறினார்—

குளியாப்பிட்டி இளைஞர் மறுவாழ்வு நிலையத்திலிருந்து 24 இளைஞர்களை விடுதலை செய்வது தொடர்பாக நடைபெற்ற கூட்டம ஒன்றில் உரை நிகழ்த்தும போதே கோர்னல் ஆனந்த வீரசேகர மேற்படி தகவலைத் தெரிவித்தார்—

[ந—வ]

## வாழ்க்கை செலவு புள்ளி 952.6

கொழும்பு, மார்ச் 1

பெப்ரவரி மாதத்துக்கான, வாழ்க்கைச் செலவு புள்ளி 952.6,

சனத்தொகை, புள்ளி விவர மதிப்பீட்டுத் திணைக்களம இதனை வெளியிட்டு உள்ளது,

(ல-007)

# விபத்தில்சிக்கியஜெயலலிதா முகத்தில் பலத்த காயம்

## தோழி சசிகலா பார்வை இழக்கும் நிலை

கொழும்பு, மார்ச் 1

கடந்த சனிக்கிமை அதிகாலை கார் விபத்தில் சிக்கிய அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் உடலில் பலதரப்பட்ட காயங்கள் ஏற்பட்டுள்ளன,

அவரது முகத்தில் சிராய்வுக் காயமும ஏற்பட்டுள்ளது, இக் காயங்களால் அவர் மிகுந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்,

அவருடன் பயணம செய்த அவரின் தோழி சசிகலா பார்வையை இழக்கும நிலையில் இருக்கிறார்,

தற்போது அவர் சென்னை தேவகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்,

அவருக்கு சிகிச்சை அளித்து வரும டாக்டர் கே சொக்கலிங [...]

மோசமான காயங்களுக்கு உள்ளாகி இருக்கிறார், அவரது இடது கண்ணில் கண்ணாடித் துண்டுகளால் காயங்கள், ஏற்பட்டுள்ளன,

பல கண்ணாடித் துண்டுகள் இன்னமும கண்ணுக்குள், இருக்கின்றன,

அவரது கண்ணில் இருந்து குன்னம வரை ஆழமான வெட்டு ஒன்று ஏற்பட்டிருக்கிறது, இதற்கு பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை தான் [...]

இந்திய மண்ணின் இதய ரோஜா!

குத்புல் ஹிந்த் — அதாயேறசூல் — கரீபே நவாஸ்

ஸெய்யிதுனா ஹாஜா முயீனுத்தீன் சிஷ்தி [ரழி] அவர்களின்

3வது வருடாந்த மனாகிப் மஜ்லிஸ்

— நிகழ்ச்சி நிரல் —

16—03—90 வெள்ளிக்கிழமை

பி ப 4—15 மணிக்கு ஹாஜாஜி சந்தனக்கூடு, கொடியேற்றம்

பி ப 5—00 மணிக்கு— ஹாஜாஜீ மௌலித் பாராயணம ஆரமபம

இரவு 7—30 மணிக்கு— 'தரீக்காக்களின் சிறப்புகள்' எனும தலைப்பில் பயான்

அவரது முகத்தில் சிராய்வுக் காயமும் ஏற்பட்டுள்ளது, இக் காயங்களால் அவர் மிகுந்த

## ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 1

நேற்று முதல் பஸ்கள் தவிர்ந்த கனரக வாகனங்கள் காலையிலும் மாலையிலும் கொழும்பு மாநகர எல்லைக்குள் இயங்குவதை தடை செய்வதென அரசாங்கம் முன்னர் அறிவித்து இருந்தது அல்லவா? அந்த தீர்மானத்தை மேலும் ஒரு வாரத்திற்கு ஒத்திப் போடுவது என தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது தாமதித்ததே இதற்கு காரணமாகும். (ந–ற)

## கருத்தரங்கு

கொழும்பு, மார்ச் 1

சர்வதேச தொழில் நிறுவனத்தின் ஆதரவில், எதிர்வரும் ஐந்தாம் திகதி ஹோட்டல் ஒப்ரோயில் "வர்த்தக அபிவிருத்தி" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது,

இக்கருத்தரங்கில் புடைவை, கிராம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ் தொண்டமான் கலந்து கொள்வார்.

...ற வர்த்தகர்களை ஊக்குவிக்கும் முகமாக இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது,

(ல–455)

அவருக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர் கே சொக்கலிங்கம் இந்த விவரங்களைத் தெரிவித்தார்,

ஜெயலலிதாவின் உடல் நிலை பற்றி அவர் தெரிவித்த விவரங்கள் வருமாறு—

செல்வி ஜெயலலிதாவின் இடது மணிக்கட்டில் சுளுக்கு ஏற்பட்டிருக்கிறது, முழங்கால்களில் சிராய்வுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன,

அவரை உடனடியாக வீட்டுக்கு அனுப்பும் வாய்ப்பு இல்லை சில நாட்களுக்கு அவர் சிகிச்சை பெறவேண்டி இருக்கிறது,

மேலும் சில உடற்கோளாறுகளும் ஏற்படலாம்,

கடந்த சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு செல்வி ஜெயலலிதாவும், அவரது தோழியான சசிகலா நடராஜனும், சாரதியான திரு அண்ணாதுரையும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்,

அவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளாகும் போது செல்வி ஜெயலலிதா பின் ஆசனத்தில் நித்திரையில இருந்திருக்கிறார்,

சசிகலா இடதுபுற முன் ஆசனத்தில் இருந்துள்ளார்,

கார் மோதுண்ட உடன் செல்வி ஜெயலலிதா நிலத்தில் வீழ்ந்துள்ளார், அப்போது அவரின் இடது கை நிலத்தில் ஊன்றப்பட்டு சுளுக்கு ஏற்பட்டுள்ளது,

முகத்தில் ஏற்பட்ட காயங்களால் வாயை அசைக்க முடியவில்லையென்று அவர் கூறினார்,

திருமதி சசிகலா இதைவிட ...னம வரை ஆழமான வெட்டு ஒன்று ஏற்பட்டிருக்கிறது, இதற்கு பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை தான் செய்ய வேண்டும்.

அவர் கண்பார்வையை இழப்பாரோ என்று அஞ்சுகிறோம்,

சாரதிக்கும் பல காயங்கள் ஏற்பட்டுள்ளன, ஆனால் அவர் நிலைமை மோசமாக இல்லை,

இப்படி டாக்டர் சொக்கலிங்கம் கூறியிருக்கிறார்,

இதேவேளை இந்திய முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரிக்குச் சென்று செல்வி ஜெயலலிதாவைப் பார்வையிட்டார்,

பாண்டிச்சேரி தேர்தல் பிரசார வேலைகளுக்காக தமிழ்நாட்டுக்கு வந்திருந்த திரு காந்தி விபத்து பற்றி அறிந்து ஆஸ்பத்திரிக்கு வந்தார்,

பின்னர் அவர் செல்வி ஜெயலலிதாவின் உடல்நிலை பற்றி டாக்டர்களுடன் உரையாடினார்,

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே ராமமூர்த்தியும், திரு காந்தியோடு ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார்,

(ல–ற)

## கச்சதீவு உற்சவம் நடைபெறாது

கொழும்பு, மார்ச் 1

பாலைதீவு கச்சதீவு வருடாந்த உற்சவம் இம்முறையும் நடைபெற மாட்டா, இதனை யாழ் ஆண்டகை தியோகுப்பிள்ளை தெரிவித்தார்–

எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெற வேண்டிய பாலைதீவு உற்சவமும், எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெற வேண்டிய வருடாந்த உற்சவமும் இம்முறை நடைபெற மாட்டாதென அவர் தெரிவித்தார்–

(ந–ற)


இரவு 7–30 மணிக்கு– 'தரீக்காக்களின் சிறப்புகள்' எனும் தலைப்பில் பயான்

17–03–90 சனிக்கிழமை

பி ப 4–15 மணிக்கு ஹாஜாஜீ மௌலித் பாராயணம

இரவு 7–30 மணிக்கு– 'இமாலய தேசம் கண்ட இறைநேசர் ஹாஜாஜி' எனும் தலைப்பில் பயான்

18–03–90 ஞாயிற்றுக்கிழமை

மு ப 9–00 மணிக்கு– ஹாஜாஜீ மௌலித் பாராயணம

மு ப 11–00 மணிக்கு– புனித குர்ஆன் ஷரீப் தமாம–

பி ப 4–15 மணிக்கு– ஹாஜாஜீ மௌலித் தமாம

பி ப 4–30 மணிக்கு– **மெய்ஞ்ஞான விளக்கவுரை**

பி ப 5–15 மணிக்கு– துவாப் பிரார்த்தனை

பி ப 5–30 மணிக்கு– **கந்தூரி தபர்றுக் விநியோகம்**

★ வெளியூர் முஹிப்பீன்கள் தமது காணிக்கைகளை காசோலை மூலம அனுப்புவதாயின் "A/C 3848, People's Bank — Kattankudy Branch" என்றும, காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளை மூலம அனுப்புவதாயின் "The President. Gareeb Nawaz Foundation" தபாற்கந்தோர் "Kattankudy" என்றும குறிப்பிட்டு அனுப்பவும, ரொக்கப்பணமாக காணிக்கைகளை தபால் மூலம தயவு செய்து அனுப்ப வேண்டாம—

★ வெளியூர்களில் இருந்து வருகைதரும முஹிப்பீன்கள் தயவு செய்து முன்கூட்டியே தகவல் அனுப்பினுல் தங்குமிட ஒழுங்குகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும–

★ உள்ளூர் முஹிப்பீன்கள் தமது காணிக்கைகளையும, நேர்ச்சைப் பொருட்களையும காரியாலயத்தில் கையளித்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம–

★ கொடியேற்றம முதல் கந்தூரி வரை காரியாலயம தொடர்ச்சியாக திறக்கப் பட்டிருக்கும–

★ கந்தூரி தினத்தன்று (18–3–90) முற்பகல் 10–00 மணிக்குப் பின் பெண்கள் வருகை

**கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது!**

★ காணிக்கை அனுப்பிய வெளியூர் முஹிப்பீன்களுக்கு மட்டுமே கந்தூரி "தபர்றுக்" தபால் மூலம அனுப்பி வைக்கப்படும– 31–3–90 வரை அவ்வாறு "தபர்றுக்" கிடைக்கப் பெறாத முஹிப்பீன்கள் தயவு செய்து கீழ்காணும முகவரிக்கு அறிவிக்கவும–

**இடம் : பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாயல் — காத்தான்குடி—5.**

Bathriyya Jumma Mosque
Kattankudy — 5 (Sri Lanka)
T'Phone: 065—2625

Moulavi Alhaj M C K
Mohamed (Bahji)
President of Gareeb Nawas Foundation



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை, தபால் பெட்டி இல. 1613. வெளியிட்ட திகதி 2 மார்ச் 1990.

DINAPATHI, 5 Gunasena Mawatha, Colombo 12 —
P.O. Box 1613